

# தூய ஆவியில் பயணம்

2011 பங்குனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

## பங்குனி மாதம் 2011

"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு

வேறு எதுவும் இல்லை"

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

## பங்குனி மாதம் 2011

### செபத்திற்கு கை கொடுத்தல்

பல வருடங்களுக்கு முன் எனது வாழ்வில் முக்கிய நாளாக நான் கருதியது, என பிறந்த ஊரில் ஆலயத்தின் கோயில் திருவிழாவாகியது. தை மாதம் நடைபெறும் தூய செபஸ்தியாரின் திருவிழாவாகும். நான் எங்கிருந்தாலும் என்ன வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் இத் திருவிழாவில் கலந்து கொள்வதற்குத் தவறியதில்லை. அவ்வாறாக செயல்பட்ட நான், அப்பொழுது பல வருடங்களாக அங்கே செல்லவில்லை. அங்கே செல்லாதது துக்கத்துக்குரிய காரணியாகவும் அமையவில்லை. அது அப்படியாக நடைபெறாவிட்டாலும் எனது வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை மறக்க முடியாமல் அடிக்கடி ஞாபகத்திற்கு வருவதைக் காண்கின்றேன். அவ்வாறாக நிகழ்வது, என் பக்கம் எதுவிதமான முயற்சிகள் அல்லது தெண்டித்தல்களை இல்லாமலேயாகும். ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது என்பது பதிய உள நோய் நிபுணர்களிடம் இது சம்பந்தமாக பல வித கருத்துக்கள் வெளிப்படாகின்றன. கருத்துக்கள் எப்படியாக இருந்தாலும் கடந்த காலத்தின் சில நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் அவ்வாறாக நிலைத்திருக்கும். இந்த கடந்த கால என் ஞாபகத்திற்கு கடுமையாகப் பாதிக்கும் சந்தர்ப்பமாகும். அவைகளை தூய ஆவியானவருக்கு மூடிக் கொள்வதற்கு இடமளித்து அப்பா தந்தையிடம் நெருங்குவதற்கு நான் உதவியாகக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. அவர் எனக்கு உதவி செய்வாராக

***அருட் திரு ஒஸ்கா அாயரத்ன அடிகளார்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 01 செவ்வாய்*

| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
|---|---|---|
| *சீராக் 17: 1-12* | *திரு.பா. 50: 5-8,14,-23* | *புனித மாற் 10: 25-31* |

## பரி.நற்செய்தியிலிருந்து

***அப்பொழுது இராயப்பர் அவரிடம் இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு உம்மைப் பின் சென்றோமே என்று சொன்னார். அதற்கு இயேசு தன் வீட்டையோ, சகோதரர் சகோதரிகளையோ, தாய் தந்தையரையோ மக்களையோ, நிலபுலன்களையோ, என் பொருட்டும், நற்செய்தியின் பொருட்டும் துறந்து விடும் எவனும், இம்மையில் இன்னல்களோடு கூட...... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியில் நிரம்புவோம். தூய ஆவியில் இந்நேரம்.... தூய ஆவியில் முழுமையாய் நிரம்புவோம், நிரம்பு நாம் இந்நேரம்...

*என்னை நோக்கி ஆண்டவரே, எனச் சொல்பவர் எல்லாம் விண்ணரசில் உட்புகுவதில்லை, மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளப்படி செயல்படுவரே செல்வர்* என்ற வாக்கை இன்று நாம் சீராக் 35:1 வழியாக காண்கின்றோம். அதாவது கட்டளையைக் காப்பாற்றுகிறவன் காணிக்கையை பெருகச் செய்கிறான்.

இயேசுவின் வாழ்வின் பொருளே இறையாட்சிதான். சிலுவையிலும் அது வெளிப்பட்டது. தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்கு உலகை அன்பு செய்த தந்தையின் மாட்சிமை மகன் வாயிலாக வெளிப்பட்டது. இயேசுவின் சிலுவைச் சாவைப் போல இம்மையில் அவைகளை நூறு மடங்காகவும், மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெறுவர் என மிக உறுதியாகச் கூறுகின்றார். சிலுவையால் மாட்சிமை, சாவால் வாழ்வு இழப்பதால் பெற்றுக் கொள்ளுதல் இது தான் இயேசுவில் நிறைவேறிய இறைத்தந்தையின் திட்டம். வேதனைகளையும் சாவையும் ஏற்றுக் கொள்ளாமல் வெற்றி பெற வேண்டும் என்ற நிலையில் பூங்காவனத்தில் கதறினாலும் பின்பு சிலுவைச் சாவை விரும்பி ஏற்றுக்கொண்டதால், விலகிச் செல்வதால் அல்ல ஏற்றுக்கொள்வதால் தான் வெற்றி என்பதைத் தான் இன்றைய வாசகம் நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. ஆகவே இன்று நிலபுலன்களோடு, பணத்தோடு, ஆதிக்கத்தோடு ஆணவத்தோடு இன்றைய சமுதாயத்தில் முதல்வராக வாழ்பவர்கள், கடைசியாவர்கள் என்பதோடு இன்று பெலயீனராக, ஒதுக்கப்பட்டவர்களாக, வெறுக்கப்பட்டவர்களாக, விலக்கப்பட்டவர்களாக, எளியோராக மறுக்கப்பட்டவர்களாக வாழ்பவர்கள் என் பொருட்டும் நற்செய்தியை கடைப்பிடிப்பதன் பொருட்டும் முதல்வராவார்கள் என்கின்றார் இயேசு நாதர்.

## எம் பேரில்

நான் இன்று சமுதாயத்தில் வாழத்துடிப்பது எதற்காக? மனிதர் என்னை மதிக்க வேண்டும் என்னைப் பார்த்து நடுங்க வேண்டும், என்னுடைய பணத்தைப் பார்த்து மயங்க வேண்டும் என்னுடைய ஆணவத்தையும் ஆடம்பர வாழ்க்கையைப் பார்த்து கதிகலங்க வேண்டும் என்று? அப்படியானால் நமக்கு கிடைக்கும் மறுவாழ்வு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஆக எனது பாவ வாழ்வை களைந்து கடவுள் பொருட்டும் இறையாட்சியின் பொருட்டும் வாழ்வதற்கு இக்கணம் முதல் திடசங்கற்பம் கொள்வோம் மறுமையில் இறையாட்சியின் மகனாக, மகளாக வாழ எல்லாம் வல்ல இறைபிதாவிடம் மன்றாடுவோம்

## செபம்

***நன்றிப் பலி செலுத்துவோர் என்னை மேன்மைப்படுத்துவர், தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுளாம் நான் அருளும் மீட்பைக் கண்டடைவர்.***

***தி.பா.50:23***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 பங்குனி 02 புதன்

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
| --- | --- | --- |
| சீராக் 36: 1-2,4-5,9-17 | தி.பாடல் 79:8-9,11,13 | பு. மாற்கு 10: 32-45 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*அவர்கள் யெருசலேமுக்குப் போகும் வழியில் சென்று கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களுக்கு முன் போய் கொண்டிருந்தார். சீடர் திகைப்புற்றிருக்க அவரை பின் பற்றிய ஏனையோர் அச்சம் கொண்டிருந்தனர். அவர் மீண்டும் பன்னிருவரை அழைத்துத் தமக்கு நிகழவிருப்பவற்றைக் குறித்துப் பேசத் தொடங்கினார். அவர் இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரணத்தண்டனை விதித்து அவரைப் பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். அவர்கள் ஏளனம் செய்து, அவர் மீது துப்பி சாட்டையால் அடித்து அவரை கொலை செய்வார்கள். மூன்று நாள்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுவார். என்று அவர்களிடம் கூறினார்...*

## ஒளியில் விழிப்புறுதல்

ஒரு மனிதனுக்கு தான் வாழும் நாட்களிலே மரணம் எப்போது நிகழும் என அறிந்துவிட்டால் வாழ்க்கையே நரகமாகி விடுமென ஒரு தத்துவ ஞானி கூறியுள்ளார். ஆனால் கிறிஸ்து தனது பிறப்பின் அர்த்தத்தை புரிந்து இருந்ததால் தனது மரணத்தையும் அறிந்திருந்தார். அத்தோடு நிகழும் விதத்தையும் அறிந்திருந்தார். அவர் மனித மகன் ஆதலால் அவ்வேதனைகளின் உணர்வுகளையும் அறிந்திருந்தார். பலருடைய மீட்புக்காக தனது உயிரை கொடுப்பது தான் இறைசித்தம் என்பது தெரிவு. அவர் எப்பொழுதும் தனது தந்தையையே நோக்கி இருந்ததால் அவரது வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தந்தையை மகிமைப்படுத்தினார். எனது வாழ்வில் நான் யாரை மகிமைப்படுத்துகின்றேன் சிந்திப்போமா?

## எம் பேரில்

சிறிது நாட்களாக என் வாழ்வில் பதிலே இல்லாத நிலைப் போன்று போராட்டமாக இருக்கின்றது. சோர்வு ஒருபக்கம் இருந்தாலும் என்னோடு என் இறைவன் இருக்கின்றார் என்ற நிலையே என்னை வழிநடத்தி செல்கின்றது. நல்ல போராட்டம் போராடி என் ஓட்டத்தை முடித்துக் கொண்டேன் என்று புனித பவுல் கூறியதுப் போல என் போராட்டங்கள் அமைய வேண்டுமென்று இறைவனை தினமும் வேண்டுகின்றேன். எனக்கேற்படும் இழப்புக்களைக் கண்டு எங்கே இவரின் தேவன்? அவரும் இவரை கைவிட்டு விட்டாரா? என எள்ளி நகைக்கின்றனர். மனித நிலையில் வேதனையாக இருந்தாலும் என் ஆண்டவரும் எள்ளி நகைக்கப் பட்டாரல்லவா? அவரை அவரது தந்தை கைவிடாததுப் போல் அவரை விசுவாசித்து வாழும் என்னையும் அவர்கைவிட மாட்டார். இந்த விசுவாசமே என்னை வாழ்விக்கின்றது. உமது சித்தம் நிறைவேறட்டும் என்றுக் கூறி அவரை பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

## செபம்

உயிருள்ள அன்பான தேவனே! என் வாழ்வில் உமது உயிருள்ள வார்த்தையினூடாக என்னை வாழ்விப்பதற்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். எந்த நிலையிலும் உம்மை விட்டு விலகாத வண்ணம் உம்மோடு இணைந்து நீர் சொல்வதை மட்டும் செய்ய உமது வல்லமையுள்ள தூய ஆவியை தந்து என்னை உமது பாதையில் வழி நடத்தும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 03 வியாழன்*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| சீராக் 42: 15-25 | தி.பாடல் 33:2-9 | பு. மாற்கு 10: 46-52 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*இயேசுவும் அவருடைய சீடரும் யெரிக்கோவுக்கு வந்தனர். அவர்களும் திரளான மக்கள் கூட்டமும் யெரிக்கோவை விட்டு வெளியே சென்ற போது திமேயுவின் மகன் பார்த்திமேயு வழியோரம் அமர்ந்திருந்தார். பார்வையற்ற அவர் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். நாசரேத்து இயேசு தாம் போகின்றார் என்று அவர் கேள்விப்பட்டு, இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கத்தத் தொடங்கினார். பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர். ஆனால் அவர் தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என்று இன்னும் உரக்கக் கத்தினார். இயேசு நின்று அவரைக் கூப்பிடுங்கள் என்று கூறினார்..... இயேசு அவரைப் பார்த்து உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர் என்று கேட்டார். பார்வையற்றவர் அவரிடம் ரபூனி நான் மீண்டும் பார்வை பெற வேண்டும் என்றார். இயேசு அவரிடம் நீர் போகலாம் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று என்றார். உடனே அவர் மீண்டும் பார்வை பெற்று அவரைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார். (பரி.நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

அன்பின் ஆவியானவரே! இன்றைய இறைவார்த்தையின் தெளிவினை நான் பெற்றிட உமது வல்லமையால் என்னை மூடிக் கொள்ளம்.

பார்வையற்று இருளில் வாழ்பவரும் ஒளியின் வடிவமான இயேசுவும் சந்திக்கும் வல்லமைமிக்க நிகழ்வே இன்றைய நற்செய்தி. பார்வையற்றவர் இயேசுவின் மேல் கொண்ட நம்பிக்கை, விசுவாசம், அதன் காரணமாக தடையாக இருந்தாலும் தனது குறிக்கோளை அடைந்திட அவர் மேற்கொள்ளும் விடா முயற்சி. மற்றவர்கள் அதட்டி விரட்டினாலும் இயேசுவின் அளவற்ற அன்பை உணர்ந்த காரணத்தினால் ஏற்பட்ட அச்சமின்மை. அதனாலேயே உரக்கக் கத்தி அழைக்கின்றார். அவரது தளராத நம்பிக்கை விடாமுயற்சியானது ஈற்றில் அவருக்கு பார்வையை பெற்றுக் கொடுக்கின்றது. உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று என்று வல்லமையாளரும் அடக்கமாகக் கூறுகின்றார்.

## எம் பேரில்

அந்த பார்வையற்றவரைப் போன்று நம்பிக்கை, விசுவாசம் பொறுமை, விடா முயற்சி, தளராத மனப்பான்மை எம்மிடம் இருக்கிறதா? அல்லது ஏதாவது சிறு சிறு நிகழ்வுகளைத் கூட தாங்கிக் கொள்ள முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறோமா? இறைவன் எனக்குள் நான் அவருக்குள் என்பதற்கு எவ்வளவு தூரம் விழிப்புறுகிறோம். ஆண்டவர் அறியாத எதுவுமே எம்மில் இல்லை என்பதைப் பற்றிய தெளிவு எமக்கு இருக்கிறதா? அனைத்தையும் அழகாக எமக்காகப் படைத்துள்ள ஆண்டவரை முழுமையாக நம்பினால், அவர் அனைத்தையுமே எமக்கு நலமாக்கித் தருவார் என்ற விசுவாசத்தை நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நாம் முயலுவோம்.

## செபம்

அன்பின் ஆண்டவரே! எம்மில் முழு நம்பிக்கை வைத்து, உம் வழிநடந்திட எமக்கு தேவையான சகல ஆசீர்வாதங்களையும் தந்து எம்மை வழிநடத்தியருளும். பார்வையிருந்தும் பார்வையற்றவர் போல் வாழாமல், நீர் தரும் நலன்களால் நிரம்பி ஒளியின் பிள்ளைகளாக வாழ்ந்திட வரமருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 04 வெள்ளி*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| சீராக் 4:1,9-12 | தி. பாட 149:1-6,9 | புனித மாற்கு 11:11-26 |

## பரி. நற்செய்யிலிருந்து

.......என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறை வேண்டலின் இல்லம் என்று அழைக்கப்படும்... ஆகவே உங்களுக்குச் சொல்லுகின்றேன். நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது, எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றையெல்லாம் பெற்று விட்டீர்கள் என்று நம்புங்கள் நீங்கள் கேட்டபடியே நடக்கும்....

## ஒளியில் விழிப்புறுதல்

இயேசு ஆண்டவர் தந்தையின் உளமெனும் இல்லத்தில் ஒவ்வொரு கணமும் தரித்திருந்தார். அப்போது தந்தையின் விருப்பங்கள் ஒவ்வொன்றையும் அறிந்தவராய், அவற்றை நிறைவேற்றினார். ஒவ்வொரு மக்களும் பரம தந்தையின் திட்டத்திற்கு உளந்திறந்திருக்க வேண்டும். அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பது அவரது தாகமாகியதுடன் தாகத்துடன் யெருசலேமில் தேவ மாளிகையை நெருங்கியவர் காணும் காட்சி, அனைவருக்கும் நற்பாடத்தை கற்பிக்க வேண்டும் என்ற உணர்வை அவருள் மேலெழும்பச் செய்தது. கசையைப் பின்னி அனைவரையும் துரத்தத் தொடங்கினார்

தந்தையின் இல்லம் பரிசுத்த ஆலயம். உலக சம்பாதிப்புக்களை உருவாக்கும் தளமல்ல. இது விற்பனைக் கூடமல்ல, நீங்கள் இருக்கின்ற இடம் என்ன? உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள் என்று கூறியவாறு விரட்டியிருப்பார் அல்லவா? சிறிது கணம் கிறிஸ்து ஆண்டவர் முன் தோன்றியிருப்போம்.

## எம் பேரில்

நாம் ஒவ்வொருவரும் தூய ஆவியானவர் குடிகொள்ளும் ஆலயமல்லவா? இந்தத் தேவ மாளிகைக்கு இயேசு ஆண்டவர் உட்புகுந்தால், எவற்றைக் காண்பார். விழிப்புறுவோம். எனக்குள் இருக்கும் விற்பனை தளங்கள் என்ன? இறைவனின் கனிகள், கொடைகள் என் வாழ்வை அலங்கரிக்கின்றதா? அன்றேல்.....

இன்றைய நாளுக்குரிய புனிதரின் உள்ளம் இறைவனின் மாளிகையானது எப்படி என்பதைக் காண்போம்

## புனித கசிமிர்

இவர் கி.பி 1458ல் போலாந்து நாட்டு அரசனின் 13 பிள்ளைகளில் 3வது பிள்ளையாகப் பிறந்தார். இவர் சிறுவயது முதல் தம்மைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி வாழ்ந்தார். வெறுந்தரையில் உறங்குவார். இரவில் பலமணி நேரம் செபம் செய்வார். இறுதி நாள் வரை கற்பு எனும் புண்ணியத்தில் நிலைத்து நின்றார். 15 வயதில் தந்தையின் கட்டாயத்தின் பேரில் ஹங்கேரி எனும் நாட்டில் அரச பதவியை ஏற்றார். ஒரு சில ஆண்டுகளின் பின் அரச பதவியைக் கைவிட்டு தாயகம் திரும்பினார். அரண்மனை வாழ்வு அவருக்கு உரிமையாக இருந்தும் நலிவுற்றோர், ஒடுக்கப்பட்டோர், ஆதரவற்றோர் விதவைகள் நோயாளிகள் சிறைப்பட்டோர் ஆகியோரைத் தேடிச் சென்று தொண்டு புரிந்தார். இவர் தமது உளமெனும் ஆலயத்தில் தாழ்மை, இரக்கம், கனிவு, தன்னடக்கம்...போன்ற நற்பண்புகள் வளரச் செய்து, இவ்வுலக மக்களுள் தனிமையுற்ற கிறிஸ்து ஆண்டவரைச் சந்தித்து அவர்கள் வாழ்வை மகிழ்விக்கும் தூதுரைப் பணியையே மேற்கொண்டார். இவர் தமது 23வது வயதில் சயரோகம் நோயினால் பாதிக்கப்பட்டு இறைபதம் அடைந்தார். இவர் கற்பின் மீது கொண்டிருந்த பற்றுதலின் காரணமாக புனிதராக்கப்பட்டார். இவர் இறந்து 122 ஆண்டுகளுக்குப் பின்னும் இவரது உடல் அழியாது நறுமணம் வீசும் புனித இல்லமாகியது. இவர் தம் வாழ்நாளில் தேவனின் அன்னை மீது பற்றுதல் கொண்டு வாழ்ந்து அவரது புகழினை அன்றாடம் பாடி வந்த புனிதருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 05 சனி*

| முதலாம் வெளிப்பாடு | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| சீராக் 51:12-20 | தி. பாட 19:7-10 | புனித மாற்கு 11:27-33 |

### பரி. நற்செய்தியிலிருந்து

***அவர்கள் மீண்டும் யெருசலேமுக்கு வந்தார்கள்... மறைநூல் அறிஞர்கள் மூப்பர்கள் ஆகியோர் அவரிடம் வந்து எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்? இவற்றைச் செய்ய அதிகாரம் கொடுத்தவர் யார்? என்று கேட்டனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக நானும் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் மறுமொழி கூறுங்கள். அப்போது எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறேன் என நான் உங்களுக்குச் சொல்வேன். திருமுழுக்கு அளிக்கும் அதிகாரம் யோவானுக்கு விண்ணகத்திலிருந்து வந்ததா? அல்லது மனிதரிடமிருந்து வந்ததா? எனக்குப் பதில் சொல்லுங்கள் என்றார்... அவர்கள் இயேசுவிடம் எங்களுக்குத் தெரியாது என்று பதிலுரைத்தார்கள். இயேசுவும் அவர்களிடம் எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குக் கூறமாட்டேன் என்றார்.***

### ஒளியில் விழிப்புறுதல்

அகிலமெங்கும் அசைந்தாடும் தூய ஆவியானவரே, இன்றைய நற்செய்தியின் மூலம் அதிகாரத்துடன் செயற்படும் இயேசு ஆண்டவரின் உள்ளரங்க அனுபவத்தினைக் காண பெலவீனமான எமது இதயங்களை மூடிய வண்ணம் வழிநடத்தும்.

தம்மையே வெறுமையாக்கி மனித உருவில் இவ்வுலகிற்கு வந்த இறைமகன் இறை அரசிற்காகச் செயற்படும்போது அவரின் செயற்பாட்டின் மூலம் அதிகாரத்தின் வல்லமை பிரகாசமாகியது. இறை அப்பாவின் அன்பில் மூழ்கிய வண்ணம் தூய ஆவியானவரின் வழிகாட்டலுக்கு உள்ளாகி அவர் பெற்ற புத்திரத் தன்மையின் உரிமையுடன் அதிகாரத்துடன் செயற்படப் பின் வாங்கவில்லை. அப்பா சொல்வதையும் செய்வதையும் நிறைவேற்றும் இயேசு எந்த அதிகாரத்துடன் இதைச் செய்கிறீர் என மூப்பர்களும், தலைமைக் குருக்களும் கேட்கும் கேள்விகளுக்கு நேரடியாக பதில் கொடுக்க இருந்தும் அவர்களின் இரட்டை வேடத்தையும் உள்ளரங்கத்தையும் கண்டு அவர்கள் இருக்கும் நிலையை அவர்களுக்கு எடுத்துக் காட்ட முன்வந்தார். இயேசு அதிகாரத்துடன் செயற்பட்டாலும் எதைச் செய்தாலும் இறை அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்றுவது அப்பா தந்தையை மகிமைப்படுத்துவதுமே அவரின் உணவாகக் கொண்டார்.

### எம் பேரில்

இறை அரசிற்கான மகனாக மகளாக தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் எமது அழைப்பிற்கு பதில் அளிக்கும்போது நாம் முகம் கொடுக்கும் சவால்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் புறக்கணிப்புகளுக்கும் முன்னிலையில் அதிகாரத்துடனா செயற்படுகிறோம்? இறை அரசினைக் கட்டி எழுப்புவதற்காக அப்பா தந்தையை மகிமைப்படுத்துவதற்காக நாம் பெற்ற புத்திரத் தன்மையின் அதிகாரத்துடனா செயற்படுகின்றோம்? நாம் இருக்கும் நிலைக்கு விழிப்புறுவோம். எந்தச் சூழ்நிலையிலும் இறை விருப்பத்தை நிறைவேற்றிட எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம். தூய ஆவியானவரின் வல்லமையினால் எல்லாச் சவால்களுக்கும் முகம் கொடுக்க முன்வருவோம்.

### செபம்

அன்பின் ஆண்டவரே, உமது திருக்குமாரன் செயற்பட்டதுபோல் இறை அரசின் மகிமைக்காக அதிகாரத்துடன் செயற்படுவதற்கு உமது பரிசுத்த ஆவியினால் எம்மை அபிஷேகம் செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 06 ஞாயிறு* *பொ. கா.9வது ஞாயிறு*

*முதலாம் வெளிப்பாடு பதிலுரைப் பாடல் இரண்டாம் வெளிப்பாடு நற்செய்தி வெளிப்பாடு*

*இ.சட்டம் 11:18,26-28 தி. பாடல் 31:1-22 உரோ 3:21-25,28 புனித மாற்கு 11:11-26*

நாம் பாரம் பரியங்களுக்கோ வெறும் வழிபாடுகளுக்கோ மாத்திரம் முதலிடம் கொடாதவர்களாக, இறைவனுடைய கட்டளைகளுக்கமைய நேர்மையுள்ளவர்களாகவும் நீதியுள்ளவர்களாகவும் இறைவனுக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாகவும் வாழ்வதற்காக வேண்டி திருச்சபைத் தாயானவள் பொதுக்காலத்தின் ஒன்பதாவது ஞாயிறு தினமாகிய இன்றைய நாளில் எம் அனைவருக்கும் அழைப்புவிடுக்கின்றாள்.

*என்னை நோக்கி ஆண்டவரே! ஆண்டவரே! எனச் செல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை.* இறைவனுடைய திருவிருப்பத்தை நிறைவேற்றியவாறு இறைமகன் இயேசுவை எம் வாழ்வின் அடித்தளமாக்கிக் கொள்வதே கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வாகும். உண்மையாகவே எமது அபிலாஷைகள், எதிர்பார்ப்புக்கள், எமது விருப்பு போன்றவற்றை எப்போதும் நிறைவேற்றிக் கொள்வதற்கு முனையும் எமக்கு, இந்த அழைப்பானது சவால் மிக்கதாகும். நல்வாழ்வு வாழ்வதற்கான போதனைகள் எமக்குக் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றை எத்தனைபேர் தான் நடைமுறைப் படுத்துகின்றார்கள். சொல்வதொன்றாகவும் செய்வது பிரிதொன்றாகவும் அமைந்துள்ளன. இந்த வாரத்தில் எம்மையே திரும்பிப் பார்ப்பது சாலப்பொருத்தமானதாகும். எமது நாடு, எமது குடும்பம், எமது சங்கம் என்பதனை இறைவிருப்பத்தினை நிறைவேற்றுவதற்கு முதலிடம் கொடுத்துள்ளதா? தந்தையின் விருப்பத்தினை நிறைவேற்றுவதற்கு எமது குடும்பத்தவருக்கு நாம் துணைபுரிகின்றோமா? ஆவியானவரது வல்லமையை வேண்டுவோம்.

## முதலாவதுவெளிப்பாட்டிலிருந்து

*எனவே என் வார்த்தைகளை உங்கள் நெஞ்சிலும் நினைவிலும் நிறுத்துங்கள் அவற்றை உங்கள் கைகளில் அடையாளமாகக் கட்டிக் கொள்ளுங்கள். உங்கள் கண்களுக்கிடையே அவை அடையாளப்பட்டமாக இருக்கட்டும். இதோ! இன்று உங்கள் முன்பாக ஆசியையும், சாபத்தையும் வைக்கின்றேன்.* நான் இன்று உங்களுக்கு விதித்த உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளை நீங்கள் கடைப்பிடித்தால், ஆசியும்..... நான் இன்று உங்களுக்கு விதித்த வழிகளினின்று விலகி நடந்து, நீங்கள் அறியாத வேற்றுத் தெய்வங்களைப் பின் பற்றினால் சாபமும் உண்டாகும்.

## ஒளியின் விழிப்புறுதல்

எல்லாம் வல்லவருடைய ஆசீர்வாதமும், சாபமும் அன்று இஸ்ராயெல் முன்பாக வைக்கப்பட்டது போல, இன்று எம் முன்னிலையிலும் வைக்கப்படுகின்றது. சாபமா? ஆசீர்வாதமா? என்பதனை நாமே முடிவு செய்து கொள்ள வேண்டும். தமது சாயலாகவே படைக்கப்பட்ட மனிதன் எத்துணை பெலயீனங்களையுடையவனாக இருந்தாலும் அவன் தம்மோடே இருக்க வேண்டுமென்பது படைப்பாளரது அபிலாஷையாக இருக்கின்றது. அதற்காக வேண்டி பல்வேறு விதமான ஆணைகளை பல்வேறு விதமான முறைகளிலும் பல்வேறு விதப்பட்டவர்கள் மூலமாகவும் முன்வைத்த போதிலும், மனிதனுக்குக் கொடுத்த சுதந்திரத்தின் மீது கைவைக்கவில்லை. தம்மீது பற்றுறுதியுள்ளவர்களாக வாழ்வதும் பற்றுறுதியற்றவர்களாக வாழ்வதனதும் பிரதிபலன்களையும் முன்வைக்கின்றார். நாம் எப்படி வாழ வேண்டும்? என்பதைத் தெளிவுபடுத்துவதற்கான இறை ஞானத்தைத் தூய ஆவியானவரிடம் வேண்டுவோம்.

## பரி. நற்செய்தியிலிருந்து

***....அந்நாளில் பலர் என்னை நோக்கி ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்க வில்லையா? உம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா? என்பர்... ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகின்ற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்.... மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்தது.... அது விழவில்லை. ஏனெனில் பாறையின் மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது. நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல் படாத எவரும் மணல் மீது தம் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்தது... அவை அவ்வீட்டைத் தாக்க அது விழுந்தது. இவ்வாறு பேரழிவு நேர்ந்தது...*

## ஒளியில் விழிப்புறல்

மகா உன்னதரான இறைவனுடைய திருவுளத்தினை முழுமையாக அறிந்து, முழுமையாக நிறைவேற்றிய, ஒப்பு-யர்வற்றவரான இறை மகனானவர் தம்மையே பின்பற்றுவதற்காக வேண்டி இன்று தமது சீடருக்கு அழைப்பு விடு-கின்றார். அந்த வாழ்க்கை முறையானது அவ்வளவு இலகுவானதாகவும் அமையாது. உலகோரது, பெற்றோரது, பிள்ளைகளினது, அன்பு செய்வோரது, தம் மீது விருப்புக் கொண்டோரது விருப்புக்-களை நிறைவேற்றுவதற்கே நாம் விரும்-புகின்றோம். அதற்காக வேண்டி பல செயற்பாடுகளில் இறங்குகின்றோம். இறை விருப்பத்திற்கமையவா செயற்படுகின்றோம் என்று பார்ப்பதற்கு மறந்து விடுகின்றோம். நாம் இறை மகனாரைப் பின் செல்பவர்-களாக *உமது திரு விருப்பப் படியாகட்டும்* என்று கூறுவதற்கு முடியுமாகின்றதா? எமது துன்ப துரிதங்கள், நோய் நொடிகள், கஷ்ட நஷ்டங்கள் என்பன முன்னிலையில் மனங்கோணாது சந்தோஷத்தோடு ஆண்டவரே, உம்மை அறியாது அடியேனுக்கு எதுவுமே நடக்காது என்று கூறுவதற்கு முடியுமேயானால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆவோம். வழியும், உண்மையும், வாழ்வுமாகிய இறைமகனையே அடித்தளமாக்கிக் கொண்டு வாழ்வதற்கான வல்லமையை ஆவியானவரிடம் வேண்டுவோம்.

## அனுபவமொன்று

உயிர்த்த ஆண்டவரையே தம் வாழ்வின் ஒரே ஆண்டவராக்கிக் கொண்ட, கணவனால் கைவிடப்பட்ட தாயொருத்தி பல விதமான துன்ப துயரங்களுக்கு மத்தியில் மிக மிகக் கஷ்டப்பட்டு வளர்த்த பிள்ளைகளது முன்னேற்றங்கருதி வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்ட மகன் மாரிடையே பிரச்சினைகள்... பற்றாக் குறைக்கு புற்று நோயால் துன்புற்ற தமது தாயாரையும் பராமரிக்க வேண்டி நிலை. திடீரென்று சத்திர சிகிச்சை யொன்றுக்கு ஆளாக வேண்டிய நிலையும் அத்தாய்க்கு ஏற்பட்டது. இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் இறையரசுக்காக வேண்டி தமது ஆற்றலையும் அளிக்கத் தயங்கவில்லை. இத்தாயானவள் இத்தகைய நிலைகளில் அயலவர்களது இருளான எண்ணங்களுக்கு அகப்படவுமில்லை. கஷ்டமான அனுபவமான போதிலும் கிறிஸ்துநாதர் மீது இடப்பட்ட அத்திவாரத்தை எவராலும் எவற்றினாலும் தகர்த்து விடுவதற்கு முடியவில்லை.

## இரண்டாம்வெளிப்பாட்டிலிருந்து

இப்பொழுதோ, கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையராக்கும் செயலுக்கும் திருச்சட்டத்துக்கும் தொடர்பில்லை என்பது வெளியாக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் மீது கொள்ளும் நம்பிக்கையின் வழியாகக் கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்குகின்றார். அவர் வேறுபாடு காட்டுவது இல்லை. ஏனெனில் எல்லாமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்... இரத்தம் சிந்தி மனிதருடைய பாவத்துக்குக் கழுவாய் ஆகுமாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார். அவரிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவே அவ்வாறு செய்தார் கடவுள். கடந்த காலத்தில் மனிதர் செய்த பாவங்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார்.

## செபம்

இரக்கம் மிகுந்த இறை தந்தையே, மீட்பரான உமது மகனையே எமது வாழ்வின் ஒரே ஆண்டவராகவும் அடித்தளமாகவும் ஏற்றுக்கொண்டு அவரைப் பின் செல்வதற்கான வல்லமையைத் தந்தருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 பங்குனி 07 திங்கள்

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| தோபித்து 1:1-3,2:1-8 | தி. பா. 112:1-6 | புனித மாற்கு 12:1-12 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*இயேசு அவர்களிடம் உவமை வாயிலாகப் பேசத்தொடங்கினார். ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டுச் சுற்றிலும் வேலி அடைத்து பிழிவுக் குழி வெட்டி ஒரு காவல் மடமும் கட்டினார். பிறகு தோட்டத்தொழிலாளரிடம் அதைக் குத்தகைக்கு விட்டு விட்டு நெடும் பயணம் மேற்கொண்டார். பருவ காலம் வந்ததும் அத்தோட்டத் தொழிலாளரிடமிருந்து திராட்சைப் பழங்களைப் பெற்று வருமாறு ஒரு பணியாளரை அவர் அனுப்பினார். ஆனால் அவர்கள் அவரைப் பிடித்து நையப்புடைத்து வெறுங்கையாய் அனுப்பினார்கள்... இன்னும் எஞ்சியிருந்தவர் ஒருவரே. அவர் அவருடைய அன்பு மகன். தம் மகனை அவர்கள் மதிப்பார்கள் என்று அவர் நினைத்துக்கொண்டு இறுதியாக அவரை அவர்களிடம் அனுப்பினார். அப்பொழுது அத் தோட்டத் தொழிலாளர்கள் இவர் தான் சொத்துக்கு உரிமையாளர் வாருங்கள் நாம் இவனைக் கொன்று போடுவோம். அப்போது சொத்து நமக்கு உரியதாகும் என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள்.*

## ஒளியில் விழிப்புறுதல்

என்னுள் இருந்து என்னைக் கணத்துக்குக் கணம் விழிப்புறவைக்கின்ற பரி. ஆவியானவரே! உச்சம் முதல் பாதம் வரை உம் அன்பினால் என்னை நிரப்பியருளும்.

தந்தையின் திருவிருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மனித சாயலாக வந்த இறைமகன் கொடிய குத்தகைக்காரரின் உவமையின் வழியாக அவர் படவேண்டிய துன்பங்களை எமக்கு எடுத்துக் காட்டுகின்றார். இறை தந்தையின் திராட்சைத் தோட்டமானது கிளையிட்டு பூத்துக் காய்த்து கனி பெருக வேண்டும் என்ற காரணத்தினால் தன் மகனைத் தந்தை இவ்வுலகம் அனுப்பினார். இலகுவான முறையில் அல்ல பல துன்பங்கள், வேதனைகளை அனுபவிக்க வேண்டும் என்பது இறை தந்தையின் திருவுள்ளம். மகன் தந்தையினால் அனுப்பப்பட்டவர் என்பதை அறிந்து துன்புறுத்தப்படுகின்றார். பரிசேயரின் மனநிலையை எடுத்துக் காண்பிப்பதற்காகவே இயேசு இந்த உவமையை எடுத்து உரைக்கின்றார்.

## எம் பேரில்

திராட்சைத் தோட்டமாம் இவ்வுலகிற்கு உரிமையானராம் இறை தந்தையினால் தொழிலாளராக நாம் அழைக்கப்பட்டுள்ளோம். என் அழைப்பை நான் உம் சித்தம் நிறைவேற்றுவதே என் உணவு என்று கூறும் அளவுக்கு உறுதியான விசுவாசத்துடன் செயல்படுபவனாக, சற்று அமைதியாக எம்மை நாம் திரும்பிப் பார்ப்போம். இயேசு மற்றவருக்காக தன்னையே தாழ்த்தியதும், அடிமை நிலையை ஏற்றதும் மரணத்திற்குத் தம் விருப்பத்தைக் கொடுத்ததும் மற்றவரை உயர்த்தும் நோக்கோடு அல்லவா. தந்தையின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற நாமும் இயேசுவோடு இணைவோம். வாழ்வில் என்ன பிரச்சினை சவால்கள் ஏற்பட்டாலும் முகம் கொடுத்து செயலாற்ற தூய ஆவியின் வரம் வேண்டுவோம்.

## செபம்

அப்பா தந்தாய்! இன்றும் இரண்டு நாட்களில் தவக்காலத்திற்கு உள்ளாக ஆயத்தமாகின்றோம். உம் அன்பு மகனின் பாடுகள் மரணம் உயிர்ப்பைத் தியானிக்க வேண்டிய காலமாக இருக்கின்றது. மன்னிப்புக் கொடுப்பதன் மூலம் இறை அன்பில் நிரம்பவும் ஆழ்ந்த மனஸ்தாபத்தின் மூலம் மனமாற்றத்துடன் வாழ்வை மாற்றவும் பெலவீனரான எம் ஒவ்வொருவருக்கும் உதவியருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 08 செவ்வாய்*

| முதலாம் வெளிப்பாடு | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| தோபித் 2:9-14 | தி. பாட 112:1-2,7-9 | புனித மாற்கு 12:13-17 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*பரிசேயர் இயேசுவை அவருடைய பேச்சில் சிக்க வைக்க ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பி வைத்தனர். அவர்கள் அவரிடம் வந்து, போதகரே, நீர் உண்மையுள்ளவர். ஆள் பார்த்து செயல்படாதவர் எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கு எற்ப கற்பிப்பவர் என்பது எங்களுக்குத் தெரியும். சீசருக்கு வரிசெலுத்துவது முறையா, இல்லையா? நாங்கள் செலுத்தவா, வேண்டாமா? என்று கேட்டார்கள். அவர் அவர்களுடைய வெளி வேடத்தைப் புரிந்துகொண்டு ஏன் என்னை சோதிக்கிறீர்கள்? என்னிடம் ஒரு தெனாரியம் கொண்டு வாருங்கள். நான் பார்க்க வேண்டும் என்றார். அவர்கள் அதைக் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களிடம் இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை? என்று கேட்டார். அவர்கள் அவரிடம் சீசருடையவை என்றார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள். என்றார். அவர்கள் அவரைக் குறித்து வியப்படைந்தார்கள்.*

## ஒளியில் விழிப்புறுல்

சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள். எது சீசருக்கு உரியது? எது கடவுளுக்கு உரியது? ஒன்றுமில்லாமையிலிருந்து உலகைப் படைத்தார் ஆண்டவர். மனிதன் வளமாக வாழ்வதற்கு தேவையான அனைத்தையுமே எமக்கு ஆண்டவர் உருவாக்கித் தந்தார். அதனை ஆண்டு அனுபவிக்கும் வரத்தையும் எமக்கு அளித்தார். ஆனால் நாமோ அனைத்தையும் எமதாக்கிக் கொண்டு நான், எனது, எனக்கு என்று சுயநலமாக வாழ பிரயாசைப்படுகிறோம். அதன் காரணமாகவே மீள முடியாத பாவத்தில் வீழ்ந்து ஆன்மாவை இழந்து விடுகிறோம். நாம் இழக்கும் ஆன்மாவை மீட்டு நிலை வாழ்விற்கு உரியவர்களாக எம்மை மாற்றவே ஆண்டவர் இயேசு தமது வாழ்வாலும் வார்த்தையாலும் எம்மை தெளிவுபடுத்த முனைகிறார். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் பரிசேயர் அவரில் குறை கண்டு பிடிக்கவே அநாவசியமான கேள்விக்கணைகளை தொடுக்கின்றார்கள்.

## எம் பேரில்

எம் மீது கொண்ட அளவிடமுடியாத அன்பின் காரணமாக இறைவார்த்தையின் மறை இரகசியமான அர்த்தங்களை புரிந்து கொள்ளக் கூடிய வல்லமையை தூய ஆவியின் மூலம் ஆண்டவர் எமக்கு அருளியிருக்கிறார். எனவே இப்பொழுது புரிகிறதா சீசருக்கு உரியது எது? கடவுளுக்கு உரியது எது? என்று

## செபம்

அன்பின் ஆண்டவரே! நீர் கூறியுள்ளது போல் ஒருவன் இந்த உலகையே தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆன்மாவை இழந்து விட்டால் அதனால் என்ன பயன் என்ற அர்த்தம் பொதிந்த வார்த்தைக்கு அனுதினமும் விழிப்புற்று வாழ வரம் தாரும். அனைத்தும் உமக்கே சொந்தம் என்று தாழ்ச்சியோடு உமது திருமுன்னிலையில் நின்று, நீர் எமக்கென்று தருவதை திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு உமது விருப்பத்தைத் தவிர வேறெதுவும் எனக்கு இல்லை என்ற உணர்வோடு வாழ எம்மை உமது ஆவியால் நழிநடத்தி அருளும்.

***ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறு பெற்றோர். அவர் தம் கட்டளைகளில் அவர்கள் பெருமகிழ்வு அடைவர்***

தி. பா 112:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2011 பங்குனி 09 புதன்* | | *விபூதி புதன்* |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *யோவேல் 2:12-18* | *தி. பாடல் 51:1-2,3-4,10-13,15* | *புனித மத் 6:1-6,16-18* |

## பரி. நற்செய்தியிலிருந்து

*மனிதர் பார்க்க வேண்டுமென்று உங்கள் நற்செய்கைகளை அவர்கள் முன் காட்டிக் கொள்ளாதபடி கவனமாயிருங்கள். இல்லையேல் வானகத்திலுள்ள உங்கள் தந்தையிடம் உங்களுக்குக் கைமாறு கிடைக்காது. எனவே நீ பிச்சையிடும் பொழுது மக்கள் புகழ வேண்டுமென்று வெளிவேடக் காரர்களைப் போல் செபக்கூடங்களிலும் தெருக்கோடிகளிலும் உனக்கு முன் பறைசாற்றிச் செய்யாதே. அவர்கள் தம் கைமாறு பெற்று விட்டனர் என்று உறுதியாக உங்களுக்குக் கூறுகின்றேன். நீ பிச்சையிடும் பொழுதோ உன் வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும். அப்பொழுது நீ இடும் பிச்சை மறைவாயிருக்கும். மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலனளிப்பார். நீங்கள் செபம் செய்யும் பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் மனிதர் பார்க்கும்படி அவர்கள்...... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுல்

மேற்கூறப்படுகின்ற நற்செய்தியின் வழி நம் உள்ளாந்திரத்தை ஊடுருவி நோக்கும் கிறிஸ்து இயேசு வெளிவேடத்தை எவ்வளவு தூரம் வெறுக்கின்றார் என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றதாய் உள்ளது. தம் படைப்புக்களிலே உன்னதமான படைப்பாகிய மனிதனை உலகில் உலவ விட்டதன் நோக்கம் நாம் அனைவரும் அறிந்ததே. இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதன் அவருக்குகந்த முறையில் வாழ்வதெப்படி என்பதை பத்துக் கற்பனைகள் மூலம் வெளிப்படுத்தியிருந்ததால் கூட பெலவீனமான மனிதன் அடிக்கடி பாவத்தில் வீழ்கின்றான். என்றாலும் இன்றைய முதலாம் வாசகத்தில் அவர் தீர்க்கத்தரிசிகள், மறைநூல் தலைவர்கள் மூலம் அழைப்பு விடுக்கின்றார். இப்பொழுதாவது நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு உள்ளத்தோடு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். வெளிவேடக் காரரைப்போல் உங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். உங்கள் இதயங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள். எவ்வளவு உண்மையான ஆழமான வார்த்தைகள்.

## எம் பேரில்

நாம் மண்ணால் உண்டாக்கப்பட்டோம். நம் உடல் அதற்கே சொந்தமாகப் போகின்றது என்பதை நினைவூட்டும் விபூதிப் புதனாகிய இன்று ஒளியானவருக்கு விழிப்புறுவோம். இறை விருப்பத்தை நிறைவேற்ற இறை தந்தைக்குள் செயல்படுவது எப்படி என்பதனை நமது தேற்றரவாளரிடம் கேட்டறிந்து கொள்வோம்.

## செபம்

இறை தந்தாய்! என்னை நான் முழுமையாகத் தெரிந்து கொள்வதன் மூலம் எனது பெலவீனங்களை ஏற்று, உண்மையான மனஸ்தாபத்துடன் உம்மிடம் வரவும் இவ்வுலக புகழ்ச்சிக்கும் செல்வத்திற்கும் மற்றும் ஆடம்பரங்களுக்கும் அடிமையாகாது, உமது அணைகடந்த அன்புக்கு மாத்திரமே அடிமையாகி வாழ்வதற்குத் தேவையான வரத்தினை உமது தூய ஆவியின் மூலம் எங்களுக்குத் தந்தருளும் ஆமென்.

***என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்: என் பாவம் அற்றுப் போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும்.***

(தி. பா.51:2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 10 செவ்வாய்*

| முதலாம் வெளிப்பாடு | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| இ.சட்ட 30:15-20 | தி. பாட 1:1-5 | புனித லூக் 9:22-25 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*மேலும் இயேசு மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள் தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்று சொன்னார். பின்பு அவர் அனைவரையும் நோக்கி, என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். என் பொருட்டு தன் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார். ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறல்

மானிட மகன் இயேசு விண்ணுலகிலிருந்து இப்பூவுலகம் வந்ததன் நோக்கம் மரணத்திற்கு முகம் கொடுத்து அனைவரையும் மனம் திரும்பலுடன் விண்ணகம் அழைத்துச் செல்வதேயாம். அப்பா தந்தையின் திருவுளமும் இதுவாகவே இருந்ததால் அதனை நிறைவு செய்வதே தனது உணவாகக் கருதிய இயேசு, தம் பாடுகள், மரணம், உயிர்ப்பைப் பற்றித் தம் சீடருக்கு வெளிப்படுத்தினாலும் அவர்களால் புரிந்துக்கொள்ள முடியாமற் போகின்றது.

இயேசுவின் அழைப்போ சுயநலம் வெறுத்து மற்றவருக்காக வாழவும், சுதந்திரமாக அவரைப் பின்தொடராமல், தம் நாளாந்த வாழ்க்கைச் சிலுவையை மனம் தளராமல் தூக்கிய வண்ணம் பின் தொடர்வதற்கேயாம் இயேசு தம் போதனைகளில் வாழ்ந்து காட்டினார். மற்றவர்களையும் வாழ அழைக்கின்றார். உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டு, தன் ஆன்மாவை இழந்தால்...? இன்றைய முதலாம் வெளிப்பாட்டில் இதோ இன்று நான் ஆசியையும் சாபத்தையும் உங்களுக்கு முன் வைக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விழிப்புறுவோம்.

## எம் பேரில்

தவக்காலம் ஆரம்பமாகிவிட்டது. பாலை நிலச் சிந்தனைகளுக்கும் செப தப வாழ்வுக்கும் உள்ளாக எங்கள் மனங்களை மாற்ற தூய ஆவிக்கு இடமளிப்போம். உலக நாட்டங்களிலிருந்து வெறுமையாகி இயேசுவின் உன்னத அன்பு நான்கிற்கும் உள்ளாகுவோம். இயேசுவின் வார்த்தைகளில் வாழ மனம் இடமளிக்காமல் விடும் சூழ்நிலைகளை இனம் காண்போம். எமது இவ்வுலக தற்காலிக வாழ்வை விட நிலையான வாழ்வுக்காக வாழ முயல்வோம். பாவிகளாம் எம்மை பாவ உலகிலிருந்து மீட்க, தன் வல்லமை, மாட்சிமையை ஒதுக்கிவிட்டு சாதாரண மனிதனாக எம்மைத் தேடி வந்த மனுமகன் இயேசுவை மனமாற்றத்துடன் தேடிச் செல்வோம். அவரின் பாடுகள், மரணத்தின் மூலமாகவே நாம் விடுதலையையும் மீட்பையும் பெற்றோம் என்பதற்கு விழிப்புறுவோம். நாம் முகம் கொடுக்கும் எல்லாச் சவால்களும் அவரை அணுக நாம் பெறும் அருட்சாதனங்களாக ஏற்றுக்கொள்வோம்.

## செபம்

ஆண்டவரே, நான் உமக்கு நன்றி சொல்வேன். நீர் என்மேல் சினமடைந்திருந்தீர் இப்பொழுதோ உம் சினம் தனிந்து விட்டது. நீர் எனக்கு ஆறுதலும் அளித்துள்ளீர். இறைவன் என் மீட்பர் அவர் மேல் நம்பிக்கை வைக்கின்றேன். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2011 பங்குனி 11 வெள்ளி* | | *விபூதி புதன்* |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *எசாயா 58:1-9* | *தி. பாட 51:1-2,3-4,14-16* | *புனித மத் 9:14-15* |

## பரி. நற்செய்தியிலிருந்து

***பின்பு யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரிய வேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுல்

இன்றைய நற்செய்தியில் கிறிஸ்து தனது மரணத்தை நினைவு கூர்கின்றார். இறை தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவரது குறிக்கோளாக இருந்தது. தம்மை யார் என்று வெளிப்படுத்த முயற்சிக்கவில்லை. தனது மகிமையைவிட இறை தந்தை மகிமை அடைவதே அவரது செயல்பாடாக இருந்தது. அவர் இருக்கும் இடம் மகிழ்வாக இருக்கும் என்பதையும் அவரே இறைமகன் என்பதையும் மறைமுகமாக கூறுகின்றார். ஆனால் அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

## எம் பேரில்

கப்பல் ஒன்றில் பலர் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று கப்பலில் தீ பற்றி எரிய தொடங்கியது. பலர் பலவரமடைந்து அங்கும் இங்கும் ஓடி திரிந்தனர். ஆனால் ஒரு சிறுவனோ அமைதியாக அமர்ந்திருந்தான். அதைக் கண்ட ஒருவர் ஏன் தம்பி நீ ஓடி தப்பவில்லையா? எனக் கேட்டதற்கு அவன் எனது அப்பா என்னை நிச்சயமாக காப்பாற்றுவார். எனக்கு பயமில்லை என்றனாம். அதன்படி அவனும் காப்பற்றப்பட்டதாக ஒரு சிறுகதையுண்டு. இச்சிறுவனைப்போல் எனக்கு இறைதந்தையின் மேல் உறுதியான விசுவாசமுண்டா? என என்னையே கேள்வி கேட்டேன். விசுவாசம் எனக்குண்டு. ஆயினும் சிறிது பயமும் உண்டு. பல தோல்வியான நிகழ்சிசகளை காணும் போது, கவலைகளினால் சோர்ந்து போகின்றேன். என்ன திகைத்து நிற்கின்றேன். ஆனால் இன்று நற்செய்தியினூடாக கிறிஸ்து விழிப்பூட்டினார். *மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா?* என்னை வாழ்வித்து வழிநடத்தும் உயிருள்ள இறைவன் என்னோடு இருக்கும் போது நான் கவலையடைய முடியுமா? எனக்காக அனைத்தையும் செய்து முடிக்க வல்லவர் என்னோடு இருக்கும் போது நான் ஏன் திகைக்க வேண்டும். இச்சிந்தனையால் மனம் ஆறுதலடைந்தது. அத்தோடு *எப்போது மகிழ்ச்சயாயிருங்கள் ஏற்றக்காலத்தில் உங்களை உயர்த்துவேன்.* என்று வாக்குறுதி தந்து என்னை பெலப்படுத்தினார். என்னை திடப்படுத்திய தேவனுக்கு கோடானக் கோடி நன்றிகள.

## செபம்

அன்பான தந்தையே தவக்காலத்தின் மூன்றாவது தினத்திற்கு காலடி எடுத்து வைக்கவுள்ள நாம் மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல இறைவார்தையால் உயிர் வாழ்கின்றான் எனும் வார்த்தையின் வல்லமையை வெளிப்படுத்திய இயேசு ஆண்டவரின் வரம் பற்றியவாறு இத்தவக் காலத்தல் வாழ எம்மை வழிடத்தியருளும் அன்றாடம் உமது ஜீவனுள்ள வார்த்தையினால் வாழ்விப்பதற்காக கோடானக் கோடி நன்றிகள். உம்மையே உறுதியாக விசுவசித்து நீர் சொல்வதை மட்டும் செய்ய உமது வல்லமையுள்ள தூய ஆவியை தந்து வழிநடத்தும் ஆமென்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 12 சனி.*

| முதலாம் வெளிப்பாடு | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| எசாயா 58:9-14 | தி. பாட. 86:1-6 | புனித லூக் 5:27-32 |

## பரி. நற்செய்தியிலிருந்து

***அதன்பின் இயேசு வெளியே சென்று சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரிதண்டுபவர் ஒருவரைக் கண்டார். அவரிடம் என்னைப் பின்பற்றிவா, என்றார். அவர் அனைத்தையும் விட்டு விட்டு எழுந்து இயேசுவைப் பின்பற்றி... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுல்

தூய ஆவியானவரே! இந்நற்செய்தி வாசகத்தை உம் தூய ஒளியால் நிரப்பி ஒவ்வொரு மனங்களையும் வழிநடத்தியருளும்.

லேவியைக் கண்டவுடனே இயேசு அவரை அழைக்கின்றார். அவரைப் பின்பற்றி வரும்படி அவர் செய்த தொழிலைவிட்டு விட்டு அவரைப் பின்தொடருகின்றார். தாம் இயேசுவைக் கண்ட மகிழ்ச்சியால் உடல், மனம், ஆவி மற்றும் முழுமாற்றம் பெற்று தாங்கொண்ணா மகிழ்ச்சிக் கடலில் நீந்துகின்றார். அவரின் அழைப்பொலியின் நிறைவு கண்டு என் இல்லத்தில் பெரும் விருந்து அளித்து மகிழ்விக்கின்றார். இதைக் கண்ட வரிதாண்டுபவர்களும் மற்றவர்களும் முணுமுணுக்கின்றனர். லேவியின் கடந்த கால வாழ்க்கையின் லேவி செய்த இருள் சூழ்ந்த பள்ளத்தாக்குகளை எண்ணி மனம் வருந்தினார். பாவ வாழ்க்கைக்கு உட்பட்ட நிலை அவரின் தீமைகள் யாவும் படம் இட்டுக் காட்டுகின்றன. ஏனெனில் பரிசுத்தமானவர் பாவிகள் மட்டில் இரக்கம் கொண்டிருக்கின்றார் என்பது அவர்கள் அவர் கண்முன் கண்டும் காணாதவர்கள் போல் இருந்தனர். பாவமே அவர்களின் தொழிலாகவும் வருமானமாகவும் இருந்தது. ஆகவேதான் இயேசுவுக்கும் லேவியின் மட்டில் ஒரு கண்பார்வை இருந்தது. லேவிக்கும் இயேசுவைப் பின் தொடருவதற்கு தாகம் இருந்திருக்கும். இருப்பினும் லேவியின் பாவ வாழ்க்கைத் தடைக்கல்லாக இருந்த படியால் இயேசுவை சந்திப்பதற்கு தயங்கியும் பின்வாங்கியுமிருப்பார். ஆகவேதான் பாவிகளை மனமாற்றத்திற்கு அழைக்க வந்த அன்பார்ந்தவர், மித்திரர், கூடுகின்ற பெருந்திரளான மக்களைப் பார்த்து சவால் விடுகின்றார். நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை என்று அருள்வாய் மலரும் அன்புள்ளம் கொண்டவரை நமஸ்கரிப்போமாக.

## எம் பேரில்

பாவிகள் மீட்புப்பெறல் ஆகுமா? பாலைவனம் சோலைவனம் ஆகுமா? ஆம் உலகம் சரீரம், பசாசு என்னும் முப்படைகளின் சூழ்ச்சிகளுக்கு அகப்பட்டு பரிதவித்த உள்ளங்களைத் தேடி இறைமகன் இயேசு ஆண்டவர் பாவமே அறியாதவர் பாவி என்ற நிர்ப்பந்தத்திற்கு அடிமையாகி சிலுவையின் ஈனச்சாவை ஏற்கும் அளவிற்கு உலகோர் மீது அன்பு கொண்டார். ஏன் இவர் சிந்திய திருக்குருதி எல்லாவித துருக்குணங்களுக்கும் அருமருந்தென அறிந்துள்ள நாம் இவரின் விடுதலையைப் பற்றி அறிவிக்க தாகம் கொண்டிருக்கின்றோமா? தூய ஆவியின் வல்லமையை வேண்டி அவர் அரசை அறிவிப்பதற்கு துணிந்து செயல் படுவோமாக.

## செபம்

அழைப்பின் குரல் கேட்டேன். என் ஆண்டவர் என உணர்ந்தேன். தந்தாய் உம் தூய வார்த்தையின் படி வாழ்ந்து அதற்குச் சாட்சி பகர்ந்து உம் பின்னே தொடர்ந்து சென்று உம் அன்புப் பணிபுரிவதற்கு எம் ஒவ்வொருவருக்கும் தூய ஆவியின் கனிகளையும் கொடைகளையும் தந்து ஆசீர்வதித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 13 ஞாயிறு* *தவகாலத்தின் 1ம் ஞாயிறு*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
| --- | --- | --- |
| தொ. நூல் 2:7-8 | தி. பாட.51:1-4,10-12,15 | புனித மத் 4:1-11 |

இன்று தவக்காலம் ஆரம்பமாகின்ற ஞாயிறு தினமாகும். இறை விருப்பத்தை நிறைவேற்றுவதென்பது தீயவனுக்குப் பிடிக்காததொன்றாகும். மனிதனுக்கு இந்த உலகமே சோதனையாகும். சோதனைகளை வெற்றி கொள்வதென்பது அவ்வளவு இலகுவான செயலாகாது. கடவுளது அன்பின் சாயலாகப் படைக்கப்பட்ட ஆதி மனிதன், சந்தோஷத்தைத் தாமே தேடிக்கொள்வதற்காக வேண்டி படைத்தவரை மறந்து விட்டு தீயவனது சோதனைக்கு ஆளாகியதால் மனித குலமே பாவமாக மாறியது. மனித குலத்தை மீட்டிடெடுப்பதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவரையும் தீயவன் விட்டு வைக்கவில்லை. ஆயினும் இறை தகப்பனுடன் கொண்டிருந்த ஆழமான தொடர்பே சோதனைகளை வெற்றி கொள்வதற்கான காரணமாகியது. எமக்கு வருகின்ற சோதனைகளை இனங்கண்டு கொண்டவர்களாக அதனை முறியடிப்பதற்கான வல்லமையை வேண்டிச் செபிப்போம்.

## முதலாம் வெளிபாட்டிலிருந்து

ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி... கிழக்கே இருந்த ஏதோன் தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார். பாம்பு... அந்த மரம் உண்பதற்குக் சுவையானதாகவும், கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத் தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள்... தன் கணவனுக்கும் கொடுத்தாள். அப்போது அவர்கள் இருவரின் கண்களும் திறக்கப்பட்டன...

## ஒளியில் விழிப்புறுதல்

சாதாணமாக மனிதர்கள், புறத்தோற்றத்தைக் கண்டே ஏமாறுவர். தமது சொந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேண்டி மற்றவர்களிடமிருந்து வருகின்ற பசப்பு வார்த்தைகளுக்கு அமையச் செயற்பட்டு உள்ளனவற்றை இல்லாமலாக்கிக் கொள்வர். இது இத்தோடு நின்று விடாது. அவர்களது செயற்பாடுகளின் பிரதி பயன்கள் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகையதான நிலை தான் ஆதிப் பெற்றோருக்கும் ஏற்பட்டது. அவர்களது தவறின் தாக்கம் மனுக்குலத்தையும் தாக்கியதோடு, வழிந்து வரவும் செய்தது.

ஆண்டவரே, உலகம் பேரிலான ஆசை, மோகம் காரணமாக நாம் உமது விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டதன் காரணமாக, செயற்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகள் எமது குடும்பத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்று இன்று உணரச் செய்தமைக்காக உமக்கு நன்றி நவில்வதோடு, எமது பாவங்களுக்காக உம்மிடம் மன்னப்பையும் இரஞ்சிக் கேட்கின்றோம்.

## பரி. நற்செய்தியிலிருந்து

*இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்குத் தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் இரவும், பகலும் நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார். சோதிக்கிறவன் அவரை அணுகி நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும் படி கட்டளையிடும். என்றான்..... அகன்று போ சாத்தானே. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்... பின்னர் அலகை அவரை விட்டுஅகன்றது. உடனே வானதூதர் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர்.*

## ஒளியில் விழிப்புறுதல்

இறையன்பில் வாழும்போது சோதனையை வெல்வதற்கான பலம் கிடைக்கும் மனித அன்பில் வாழும்போது பாவம் மனிதனை ஆட்கொள்ளும். இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையால் எப்போதும் இடைவிடாத தொடர்பினை தந்தையுடன் கொண்ருந்தார். தந்தையின் அன்பினால் நிரம்பியிருந்தார் தூய ஆவியானவரது துணையுடன் எப்போதும் செயற்பட்டார்.

யோர்தான் நதிக்கரையில் *என் அன்பார்ந்த மகன் நீரே, உம்மில் பிரியமாயிருக்கிறேன்* என்ற இறை புத்திரத்தன்மையின் தனித்தன்மையை ஏற்றுக்கொண்டு ஆவியானவரால் பாலைநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட இறை மகனை அலகையானவன் உலக தேவைகளை முன் வைத்தே சோதிக்கப்பார்க்கின்றான். ஆயினும், இறை மகனானவருக்கு உடல், உள தேவைகளிலும் முக்கியமாயிருந்தது இறைவனுடைய விருப்பமாகும். இயேசு தமது பணி வாழ்வின் போது பலருக்கு உணவளித்தார் ஆனால் தனக்கு என்று வரும்போது இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். *என் வானக தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே என் உணவு* இயேசு அப்போதும் தந்தையின் மகிமைக்காகவே அனைத்தையும் செய்தார். பிறருக்காகவே வாழ்ந்தார். படைத்தவருக்கே படைப்பின் அதிகாரத்தைக் கொடுப்பதற்கு தீயவன் முனைகின்றான். அனைத்து அதிகாரமும் இறைமகனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மண்ணகத்திலும் விண்ணத்திலும் எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது எதுவிதமான பாகுபாடுமின்றி அனைவருக்கும் பணி புரிவதற்கான அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. தந்தையின் அதிகாரத்தை படைப்பு எதுவும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற தெளிவு இறைமகனுக்கு இருக்கிறது.

## எம் பேரில்

இறை வார்த்தை வழியாக, இடைவிடா செபத்தின் வழியாக, தளராக நம்பிக்கைவழியாக எமக்கு வரும் சோதனைகளை முறியடிப்பதற்கான வல்லமையை வேண்டுவோம்.

## இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து

ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அது போலவே எல்லா மனிதரும் பாவம் செய்ததாக எல்லா மனிதரையும் சாவு கவ்விக் கொண்டது... கடவுளின் அருளும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனிதரின் வழியாய் வரும் அருள் கொடையும் பலருக்கும் மிகுதியாய்க் கிடைக்கும்.. ஒரு மனிதரின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானது போல் ஒருவரின் கீழ்படிவால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆனார்கள்.

## ஒளியில் விழிப்புறுதல்

ஒருவரது பாவத்தின் விளைவு பயங்கரமானது. அதன் விளைவு வழிந்தோடிவரும். தனிமனிதனது பாவத்தினால் அருள் கொடைகளை இழந்திருந்த மனிதனை இறைமகன் வழியாக மீட்டெடுத்துக் கொண்டார். இறை தகப்பன் பெலவீனங்கள் காரணமாக பல பாவங்களைச் செய்துள்ள நாம், மீட்பரது திருக்குருதியின் வழியாக தூய்மைப்படுத்தப்பட்டு அதன் விளைவு மற்றவர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துவதை நிறுத்துவதற்காக வேண்டி மனம் வருந்துவோம், மன்னப்புக் கேட்போம். அன்பின் தந்தையைப் புகழுவோம்.

## செபம்

தூய ஆவியானவரே, பாவத்தின் பாரதூரமான தன்மையையும் அதன் விளைவையும் எமக்குக் காண்பித்தருளும். பாவத்தின் இனிமையான தன்மையின் அடியில் ஓடுகின்ற விஷம் கலந்த ஆற்றினை காண்பதற்காக வேண்டி எமது கண்களைத் திறந்தருளும். அப்பா பிதாவானவருடன் ஆழமான தொடர்பினை வைத்திருப்பதற்கு வல்லமையையும் தாகத்தையும் தந்தருளும்.

***கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும்***

(தி.பா. 51:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2011 பங்குனி 14 திங்கள்* | | *விபூதி புதன்* |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *லேவி 19:1-2,11-18* | *தி. பாடல் 19:7-9,14* | *புனித மத் 25:31-46* |

## பரி.நற்செய்தியிலிருந்து

*வானதூதர் அனைவரும் புடை சூழ மானிட மகன் மாட்சிமையுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப் படுவர். ஓர் ஆயன் செம்மறி ஆடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறி ஆடுகள் வலப்பக்கத்திலும், வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவது போல் அம் மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து என் தந்தையிடம் இருந்து ஆசி பெற்றவர்களே வாருங்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுல்

நீ உன்னை அன்பு செய்வது போல் உன் அயலானையும் அன்பு செய்வாயாக என்பது இரண்டாவது கட்டளை. இயேசு கிறிஸ்துவின் இன்றைய நற்செய்தி இக்கட்டளைக்கு முதலிடம் கொடுக்கின்றதை நாங்கள் காண்கின்றோம். அன்பே கடவுள். இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு செயலும் அதை நிரூபிக்கின்றது. இன்றைய நற்செய்திக்கு நாம் இடமளித்தோமேயானால் எம்முடைய வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் எமக்குக் கேள்விக்குறியாகவே அமைந்து விடும். இறைமகன் இயேசு இறை தன்மையில் இருந்து வெறுமையாகியதன் நோக்கமே, இறையன்பின் இலட்சணங்களை மனிதனுக்கு வெளிப்படுத்துவதற்காகும். இன்றைய முதல் வாசகத்திலும் மனிதன் மேல் இறைவன் கொண்டுள்ள அன்பைப் பற்றியே வெளிப்படுத்தப்படுகின்றது. இறை தந்தையின் ஆசியையும், அவருடைய அரசுரிமையும் பெற்றுக்கொள்ளும் ஒரே வழி ஒருவர் ஒருவரை அன்பு செய்து அவர்களுடன் தமக்குள்ளவற்றைப் பகிர்ந்து வாழ்வதாகும். இதை எம் வாழ்வில் கடைப்பிடிப்போமாக

## எம் பேரில்

கண்ணுக்கு புலப்படாத இறைவனைச் சந்திப்பதற்கான ஒரே ஒரு வழியை புனித மத்தேயு 18:19-20ம் வசனத்தின் வழி இயேசு வெளிப்படுத்தியிருக்கின்றார். அதுவே அவருடைய நாமத்தில் ஒற்றுமையாகும் இடமாகும். நாம் நோயுற்றவர்களைச் சந்திக்கும்போது, வறியவர்களுடன் நமக்குள்ளதைப் பகிர்ந்து வாழும்போது, உயிர்த்த இறைவனை நாம் சந்திக்கின்றோம். இவற்றை நம் வாழ்வில் கடைப்பிடிக்கின்றோமா? ஒரு கணம் நம்மையே நாம் திரும்பிப் பார்ப்போம். இன்றில் இருந்து இறை இயேசுவின் குரல் ஒலிக்கச் செவிமடுப்போம். இறையரசின் உரிமைப் பேற்றைப் பெற்றுக் கொள்வோம்.

## செபம்

அன்பின் இறைவா! உமது தாகத்தினை இன்றைய நற்செய்தி வழியாக அறிந்து கொண்ட உம் பிள்ளைகளாகிய நாம் அனைவரும், ஒவ்வொருவருள்ளும் வாழ்கின்ற உம்மை காண்பதற்கும் உமது தேவைகளை நிறைவேற்றுவதற்கும் உம்மோடு சங்கமமாகுவதற்கும் வேண்டிய அருளாசீரைப் பொழிந்தருளும் ஆமென்.

*ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது. அது புத்துயிர் அளிக்கின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 15 செவ்வாய்*

| முதலாம் வெளிப்பாடு | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| எசாயா 55:10-11 | தி. பா. 34:3-6,15-18 | புனித மத்தே 6:7-15 |

## பரி. நற்செய்தியிலிருந்து

***மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள். விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே!.... மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்கள். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுல்

தந்தையின் குரலொலிக்கு எப்பொழுதும் விழிப்புடன் செயல்படும் இயேசு, தான் தந்தையுடன் கொண்டுள்ள இணைப்பைப் பற்றித் தம் சீடர்களுக்கு அறிவிக்கின்றார். இயேசுவோடு வாழ்ந்து அவரைப் பின்தொடரும் சீடர்களுக்குத் தர்மச் செயல்களைச் செய்யப் போதிக்கும் பொழுது, செபிக்கவும் கற்றுக் கொடுக்கின்றார். செபம் எப்படியானதாக இருக்க வேண்டும் என்பதையும், எப்படிச் செபிக்க வேண்டும் என்றும் இன்றைய நற்செய்தியினூடாக இயேசு கற்பிக்கின்றார். வீண் பிதற்றலும், மிகுதியான சொல் அடுக்குகளும் இறைவன் முன் அவசியமற்றனவா. ஒவ்வொருவரினதும் உள் மனதை இறைவன் அறிந்திருக்கிறார். இறைவனின் ஆழமான விசுவாசமும், உறுதியான மன நிலையுமே தந்தையோடு உறவாட அவசியம் என்பதை விழிப்பூட்டுகின்றார். இயேசு கற்பிக்கும் செபத்தில் இரு பிரதான பகுதிகள்

1. தந்தையைப் போற்றுவது
2. தந்தையிடம் இரஞ்சுவது. தந்தை தூயவரெனப் போற்றுதல், இறையரசு வருக என வாழ்த்துதல், ஆசித்தல், இறை சித்தம் விண்ணுலகில் போல மண்ணுலகிலும் நிறைவேற, நாளாந்த உணவை, பாவ மன்னிப்பை, சோதனையிலிருந்தும், தீயோனிடமிருந்தும் விடுவிப்பை வேண்டுல் இரண்டாம் பகுதியாகும். இறை தந்தைக்கு முன்னால் மன்னிப்புக் கொடுக்குமளவுக்கு அவரிடமும் மன்னிப்பு கிடைக்கப் பெறும் என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

## எம் பேரில்

தூய ஆவியின் ஒளியில் ஆண்டவர் இயேசுவிடம் பூரண நம்பிக்கையுடன் உறவாடுவது செபம். நாம் இருக்கும் நிலையிலிருந்து சதா இருக்க வேண்டிய இடம் நோக்கி (அப்பா தந்தையின் அரவணைப்பை) நாம் செல்லும் வாழ்க்கைப் பயணம் செபம். இன்பத்திலும் துன்பத்திலும், வெற்றியிலும் தோல்வியிலும் இறைவனைப் போற்ற பழக்கப்பட்ட மறுமலர்ச்சியின் மக்களாகிய நாம் வேண்டுதலுக்கல்ல, போற்றவும் புகழவும் நன்றி கூறுவதும் எமது செபத்தின் நோக்காகக் கருதுவோம். எம் அன்றாட தேவைகளைக் காணும் ஆண்டவர் எம் குறைகளை நிறைவுபடுத்துவதால் நன்றி கூறி அவர் அன்பில் நிலைத்து வாழ முயல்வோம். ஆவியின் கொடைகளைப் பெற்றுள்ள நாம் அதனை அனுபவித்து பகிர்ந்தளிக்கும் பொழுது தந்தையின் திருவுள்ளம் நிறைவேற்றி அவர் அன்பில் நிரம்புகின்றோம். எப்படிச் செபிப்பது என்பதில் விழிப்புறுவோம்.

## செபம்

அன்பு இறைவா, நான் வெறும் வெளிவேடமாக உனக்கு முன்தோன்றி நிற்காமல் உமது அளவற்ற அன்பை உணர்ந்து நன்றி துதி பாட எனக்கு வரம் தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 16 புதன்* — *விபூதி புதன்*

*முதலாம் வெளிப்பாடு* — *யோனா 3:1-10*

*பதிலுரைப் பாடல்* — *தி. பாடல் 51:1-2,10-11,16-17*

*நற்செய்தி வெளிப்பாடு* — *புனித லூக் 11:29-32*

### பரி.நற்செய்தியிலிருந்து

***மக்கள் வந்து கூடக்கூட இயேசு கூறியது இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தை தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிட மகனும் இந்தத் தலை முறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தை கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா? தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலை முறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள்.***

*(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

### ஒளியில் விழிப்புறுல்

தூய ஆவியே! என் ஆருயிரே, நான் உம்மை ஆராதிக்கிறேன்.

இன்றைய நற்செய்தியானது மனிதனின் மனமாற்றத்தை இயேசு விரும்புகிறார் என்பதை காட்டுகின்றது. மனிதர் பாவம் செய்து இறைவனின் மேன்மையை அழித்து தங்கள் நிலை மறந்து, புதுமைகள் மூலம் தமக்கு ஏதுவான நன்மைகளை மட்டும் விரும்புகிறார்கள். நினிவே மக்கள் பாவம் செய்தபோது யோனா மூலம் அந்த நாட்டை அழிக்கப் போகிறேன் மனம் மாறும்படி யோனாமூலம் அறிவுறுத்துகிறார். மக்களும் கடவுளின் செய்தியை நம்பி தாம் செய்துவரும் தீய வழிமுறைகளையும் கொடும் செயல்களையும் விட்டொழிக்க வேண்டுமென்று அரசன் முதல் பெரியோர் சிறியோர் வரை அனைவரும் சாக்கு உடை அணிந்து சாம்பல் மேல் இருந்து உணவு உண்ணாமல் கடவுளை நோக்கி மன்றாடினார்கள். தம்மீது இரங்குவார் என்றும் தளராத நம்பிக்கையுடன் மன்றாடினார்கள். ஆண்டவரும் அவர்களின் மனமாற்றம் கண்டு அவர்களை அழிக்காது விட்டார்.

### எம் பேரில்

இன்றைய காலகட்டத்தில் மனிதரின் மன நிலையை பாவச் செயல்கள் பலவிதமாக வெளிப்படுத்துகின்றன. அதற்கேற்ப இயற்கை நிலைகள் கேள்விகளாய் போராட்டமான நிலைகள் கேள்விகளாய் எழுகின்றன. இதற்கு உயிரோட்டமாக இறைவனின் வார்த்தை மனித மனங்களை ஊடுருவி தாக்குகிறது. நாமும் எமது பாவச் செயலிலிருந்து குற்றம் உணர்ந்தவர்களாக நொறுங்கிய இதயத்துடன் கடவுளுக்கு ஏற்ற பலியாக நம்மைப் படைப்போம்.

### செபம்

என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னை கழுவியருளும். என் பாவம் அற்றுப் போகும்படி என்னை தூய்மைப்படுத்தியருளும். கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். உறுதிதரும் ஆவியை புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 17 வியாழன்*

| முதலாம் வெளிப்பாடு | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| எஸ்(கிரே) 4:17 | தி. பாட 138:1-3, 7-8 | புனித மத்தே 7:7-12 |

## பரி. நற்செய்தியிலிருந்து

***கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர். தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா!...***
*(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறல்

ஞானம், வீரம், சக்தி, அறிவைப் பொழியும் தூயனே வந்தருளும். அன்பின் ஊற்றானவரே! இந்நற்செய்திக்குள் மறைந்திருக்கும் மறையுண்மைகளைப் புரிந்து வாழ எம்மை வழிநடத்துவீராக!

தற்காலிய தேவைகளை நிறைவாக்கிக் கொள்வதிலேயே தம்மை அண்டி வரும்மக்களின் மனநிலைகளைக் காண்கிறார். ஆனால் அப்பா தந்தை தம்மிடம் எதிர்பார்ப்பது மக்களின் உடல் தேவைகளைப் போல் அவர்களின் ஆன்ம தேவைகளையுமே எனக் காணும் இயேசு, தேடுங்கள் , கேளுங்கள், தட்டுங்கள் எனும் வார்த்தைகளால் கிறிஸ்துநாதரின் வாழ்க்கை அனுபவத்தையே வெளிக் கொணர்கின்றார். இறை அப்பாவோடு நாற்பது பகலும் இரவுமாக பாலைவன வாழ்க்கையில் வழி நடத்தப்பட்ட விதம் ஞாபகம் வந்திருக்கும். தாம் முகம் கொடுக்கவிருக்கும் பாடுகள், மரணம் எப்பேர்ப்பட்டது. இதற்கான வல்லமை தூய ஆவியானவரிடமேயே கிடைக்கும் என்பதையும் அறிகின்றார். அதனாலேயே கேளுங்கள் தூய ஆவியானவரை, தேடுங்கள் இறையரசை, தட்டுங்கள் உங்கள் மனதை என்று சொல்லாமல் சொல்கிறார். ஒவ்வொருவரும் மனஸ்தாபப்பட்டு பாவ மன்னிப்பைப் பெற்று நிலைவாழ்வை அடைவதை ஆசிக்கின்றார்.

## எம் பேரில்

தவக்காலத்தின் ஒன்பதாவது தினத்திற்கு காலடி எடுத்து வைத்துள்ள நாம் கேளுங்கள் தரப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும் எனும் இறைவார்த்தைகளில் மறைந்துள்ள மறையுண்மைகள் எதை நோக்கமாகச் சொல்கின்றது என்பதை முதலில் நாம் அறிந்துள்ளோமா? இல்லாவிடில் உலகபோக்கிலான அன்றாட தேவைகளைக் கேட்கவும், தேடவுமா சொல்லப்படுகின்றது. விழிப்புறுவோம், சிந்திப்போம், செயல்-படுவோம். இறையப்பாவிடம் உரிமையோடு கேட்போம் தூய ஆவியானவரை. தேடுவோம் இறையரசை. அங்கும் இங்குமல்ல முதலில் குடும்பத்திலுள்ளயே கட்டி எழுப்புவோம். தட்டுவோம் நம் இதயக்கதவை. நமது பெலவீனங்கள் மேல் மனம் - கீழ்மனப்பாவங்கள் திறக்கப்பட்டு வெளியேறும். அப்போது நம்மோடு உணவருந்த கிறிஸ்துநாதர் நம் உள்ளத்துக்குள் வருவார். அத்திருவிருந்தில் பங்குகொள்ள அழைக்கும் இயேசுவின் குரலுக்கு செவிமடுப்போம். பங்குகொள்வோம். பேறுபெற்றோராகுவோம்.

## செபம்

நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை தந்தை அறிந்திருக்கிறார் எனக் கூறிய இறைமகனே! இறையரசுக்குள் வாழ ஆசிக்கும் எம்மை உலகம், சரீரம், பசாசு எனும் மூவித பகைமைகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துச் செல்வீராக ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 18 வெள்ளி* — *விபூதி புதன்*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| எசேக்கியல் 18:21-28 | தி. பாடல் 130:1-8 | புனித மத்தேயு 5:20-26 |

### பரி.நற்செய்தியிலிருந்து

***மறைநூல் அறிஞர் பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில் நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன். கொலை செய்யாதே கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர் என்று முற்காலத்தவர்க்கு கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தம் சகோதரர் சகோதரிகளிடம் சினம் கொள்கின்றவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார். தம் சகோதரரையோ சகோதரியையோ முட்டாள் என்பவர் தலைமை சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார். அறிவிலியே என்பவர் எரி நரகத்துக்கு ஆளாவார் (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

### ஒளியில் விழிப்புறுல்

தூய ஆவியானவரே! இவ் வார்த்தை காட்டும் வழியில் வாழ எம்மை வழிநடத்தும். நாம் பலிசெலுத்தப் போகும்போது அப்பா தந்தையுடன் உறவாடச் செல்லும் இடம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று அவர் வார்த்தையூடாக கூறுகிறார் என உரிமை வாழ்வு உங்களுக்குத் தேவையானால் ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாயிருங்கள். ஒருவர் தன் சகோதர சகோதரிகளை மன்னக்காவிடில் உங்கள் பலி ஏற்றுக் கொள்ளப்படாது. விண்ணரசுக்குள் புக முடியாது என்று கூறுகிறார். ஆகவே ஒருவர் ஒருவருக்கு தீங்கு இழைக்காமல், சினம் அடையாமல் வஞ்சித்து பறிக்காமல் வழக்காடாமல் தூய உள்ளத்தோடு ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டால் விண்ணரசுக்குள் புக முடியும் என ஆணித்தரமாய் கூறி எம்மை விழிப்பூட்டுகிறார்.

### எம் பேரில்

நாம் யாவரும் பெரிய பெரிய காரியங்களை சாதிப்பதாக நினைத்துக் கொண்டு சகோதரர் சிறிய தவறு விட்டாலும் அதை ஏற்காமல் மேலும் மெருகூட்டி சினம் கொண்டு வெறுப்புக்குள்ளாகி மனம் சோர்ந்து நாமும் கலங்கி மற்றவரையும் கவலைப்படுத்தி அமைதியின்றி தடுமாறுகிறோம். எனவே அவற்றை தவிர்த்து அன்புறவு கொண்டு வாழ்வோமானால் மனதில் அமைதி உற்சாகம் நோயற்ற வாழ்வு வாழ்ந்து இறைவனை அழைப்போம்.இறைவன் ஒளியில் திழ்வோம்.

### செபம்

அன்புத் தந்தாய், தவக்காலத்தின் 10வது தினத்தை வந்தடைந்துள்ள நாம் உமது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் மதித்து, கௌரவித்து, பாராட்டி வாழும் வாழ்க்கை நெறி சொண்டவர்களாக வாழ எம்மை அன்பின் ஆவியானவரால் வழிநடத்தும் ஆமென்.

***ஆண்டவரே! நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார்தான் நிலைத்து நிற்க முடியும். நீரோ மன்னிப்பு அளிப்பவர். மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்***

(தி. பாடல் 130:3-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 19 சனி*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|---|
| 2 சாமு 7:4-6,12-14,16 | தி. பாட 89:1-4,26,28 | உரோ 4:13,16-8,22 | அல்லது பு. லூக்2:41-51 புனித மத்தேயு 6:7-15 |

## முதலாம் வெளிப்பாட்டிலிருந்து

*என் முன்பாக உனது குடும்பமும், உனது அரசும் என்றும் உறுதியாகும். உமது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்.....*

## இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து

....இறந்தவர்களை வாழ்விப்பவரும், இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அவர் முன்னிலையில் ஆபிரகாம் நம் தந்தையானார்... தயங்காமல் நம்பினார்...

## பரி. நற்செய்தியிலிருந்து

....அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இந்நிகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கி விடத் திட்டமிட்டார்... ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, யோசேப்பே தாவீதின் மகனே உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில், அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்....

## ஒளியில் விழிப்புதல்

யோசேப்பு இந்த உலகில் வாழ்ந்த நீதிமான்களுள் ஒருவராவார். அதன்படியால் தான் உலக நியதிக்கு அமையாத விதத்தில் கருத்தரித்திருந்த மனைவியை அவமானத்திற்கு உள்ளாக்க விரும்பாதவராக இரகசியமாக விலக்கி விடுவதற்குத் தீர்மானிக்கின்றார். ஆனாலும் இறைவனது கட்டளைக்குச் பிரமாணிக்கமுள்ளவராகுகின்றார். நிகழ்ச்சியின் யதார்த்தத்தை தூதர் வழியாக அறிந்ததால் பின்னர் பேறுபெற்ற தாயாருள் மனுவுருவாகியிருந்த மீட்பருக்கு தாய்க்கும் தேவையானவற்றை நிறைவேற்றியவாறு, அவர்களைப் பாதுகாத்து வந்த விதம் பற்றி இன்றைக்குரிய பரிசுத்த நற்செய்தி கூறுகின்றது.

மனுவுருவாகிய வார்த்தை-யானவருக்கு இவ்வுலகில் அவதரிப்பதற்கு தந்தைக்குரிய இடம், அன்பு, பாதுகாப்பு என்பனவற்றை அளித்தவாறு தாயாகவிருந்த பேறுபெற்ற தாயாரை நாசரேத்திலிருந்து பெத்லகேம் வரை அழைத்து வந்த பயணத்தையும் இவ்வுலகில் அவதரித்த குழந்தை இயேசுவுக்குப் பாதுகாப்பளித்தவாறு தந்தைக்குரிய இடத்தையும் கௌரவமாகவும் நன்றி மறவாத மக்களாக நினைவு கூருவோம். அதேபோல ஏரோது குழந்தைகளைக் கொல்வதற்காகத் தேடியபோது குழந்தையையும், தாயையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்ற பயணம் எத்தகைய துன்பங்கள் நிரம்பியதாக இருந்திருக்கும்? அதற்கான காரணம் அவர் இறைதந்தைக்குப் பிரமாணிக்கமுள்ளவராக வாழ்ந்தமையேயாகும். அவருக்காக வேண்டி இன்றைய நாளில் நாம் இறைதகப்பனைப் புகழுவோம்.

## செபம்

தூய ஆவியானவரே, இறை தகப்பனால் எமக்களிக்கப்பட்ட பிள்ளைகளுக்காக வேண்டி நன்றி கூறுகின்றோம். இன்றைய சமுதாயத்திற்கேற்ப பிள்ளைகளை வளர்க்காது அப்பா பிதாவின் திருவுளத்திற்கமைய, அவருக்கே உகந்த பிள்ளைகளாக வளரப்பதற்குத் தேவையான ஞானத்தையும் திடத்தையும் எமக்களித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| *2011 பங்குனி 20 ஞாயிறு* | | *தவக்காலம் 02வது ஞாயிறு* | |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *இரண்டாம் வெளிப்பாடு* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *தொ.நூல் 12:1-4* | *தி. பாட.33:4-5,18-20,22* | *2தீமோ 1:8-10* | *புனித மத் 17:1-9* |

கடந்த ஞாயிறு தினத்திற்குரிய முதலாவது வெளிப்பாட்டின் வழியாக பாவத்தின் விளைவு காரணமாக மனிதனுக்கிருந்த இறைவனுடனான தொடர்பு அறுந்து விடுவதைக் காண முடியுமாக இருந்தது. இன்றைய நாளுக்கான முதலாவது வெளிப்பாட்டின் ஊடான, அறுந்துபோன தொடர்பை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதற்காக வேண்டி அன்பான தகப்பன் படியெடுப்பதைக் காண்பதற்கு முடியுமாகிறது. இறை தகப்பனாவர் மனிதனுடன் கொண்ட ஆழமான தொடர்பினை தமக்குரிய மகிமையை, மாட்சிமையை தமது மகன் வழியாக சீடருக்குக் காண்பித்தமையை பரிசுத்த நற்செய்தி நிகழ்ச்சியினூடாகக் காண்பதற்கு முடியுமாகிறது.

அதேபோல இறை தகப்பனாவர் எம்மோடு எத்தகைய தொடர்பினை வைத்துள்ளார் என்பதனைக் காண்பதற்கும் திருமுழுக்கு வழியாக அவர் தந்துள்ள அழைப்பின் பேரில் விழிப்புறுவதற்கும் நாம் இருக்கின்ற இடத்திலிருந்து உம்மிடம் வருவதற்கான வல்லமையைத் தந்தருளும் என்று இறைஞ்சுவோம்

## முதலம் வெளிப்பாட்டிலிருந்து

*ஆண்டவர் ஆபிராமை நோக்கி, உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாக விளங்குவாய் ...*ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார்.. ஆபிராம் ஆரான் விட்டுச் சென்றபொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து....

## பரி. நற்செய்தியிலிருந்து

***ஆறு நாள்களுக்குப் பின்பு இயேசு பேதுருவையும், யாக்கோபையும், அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள் முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளி போன்று வெண்மையாயின. இதோ மோசேயும், எலியாவும் அவர்களுக்கு முன் தோன்றி இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது... இது உமக்கு விருப்பமா என்றார். அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த போது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள் மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவி சாயுங்கள் என்று ஒரு குரல் ஒலித்தது.... அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்த போது இயேசு மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும் வரை இக்காட்சியைப் பற்றி எவருக்கும் சொல்லக் கூடாது என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.***

## இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து

எனவே, நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக் குறித்தோ, அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவையில்லை. கடவுளின் வல்லமைக் கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள். அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல, காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி கிறிஸ்து இயேசு வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குத் தூய அழைப்பு விடுத்துள்ளார். நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன் மூலம் இப்போது அருள் வெளிப்பட்டுள்ளது. அவர் சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்.

## ஒளியில் விழிப்புறுதல்

எழுபது வயதான ஆபிராம் பிள்ளைகளில்லாத அவர் ஆண்டவரது அழைப்புக் கிடைக்கும் வரைக்கும் தமக்குப் பழக்கப்பட்ட உலகத்தில் தான் வாழ்ந்து வந்தார். தாம் பிறந்த இடம் பெற்றோர், இனத்தார் அனைவரையும் கைவிட்டு விட்டுச் செல்வதற்கான அழைப்புத் தான் அவருக்குக் கிடைத்தது. இந்தப் பூவுலகில் இருந்த பிறிதொரு இடத்திற்குப் போவதற்குத் தான் அவருக்கு அழைப்பு கிடைக்கப் பெற்றது. இந்த அழைப்புக்கான இரகசியம் என்னவாக இருந்திருக்கலாம்? தம் பேரில் நம்பிக்கை கொண்டு அனைத்தையும் கைவிடக் கூடிய அர்ப்பணமாகக் கூடிய பணியாளர் ஒருவரே இறைவனது ஒலிக்குச் செவிமடுத்தார். உயர்ந்த மலைக்கு தமது சீடருடன் சென்ற இறைமகனின் உண்மையான உருவினை இறை தகப்பனார் வெளிப்பாடாக்கினார். இயேசுவின் வாழ்க்கை துன்புறுதல், மரணம் என்பவற்றோடு நான் விடாது, உயிர்ப்பின் வழியாக இவ்வுலகில் நிலவும் என்பதற்கு சீடர்கள் சாட்சி பகர்நதார்கள். *என் அன்பார்ந்த மைந்தர் இவரே.. இவருக்குச் செவிசாயுங்கள்* இந்த ஒலி இறைமகனது செவியில் படும்போது அவர் எத்தகைய அபவிமானத்தோடு இருந்திருப்பார். இந்த நிகழ்வை ஒருவரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டாமென்று சீடருக்கு இறைமகன் கூறுகின்றார். இறைவனுக்குச் செவி மடுக்கின்ற அளவுக்கு உலகினைச் சாராத பணியாளர்கள் ஆவோம். ஏனெனில் செவிமடுக்காத பணியாளர்கள் உலகைச் சந்தோஷப்படுத்துகின்ற பணியாளர்களாக மாத்தரமே செயற்படுவர். இறை புத்திரத்தன்மையின் சாட்சியாளர்கள் ஆக மாட்டார்கள். இறைமகன் தான் நமக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாவார்.

இவ்வாறு சாட்சி பகர்ந்த ஒருவரை திருச்சபைத் தாயானவர் இன்று எமக்கு முன் வைக்கின்றார். அவர்தான் பவுலடிகளார். அவர் புதியதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக வேண்டி என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி தமது அனுபவத்தின் வழியாக வெளிப்பாடாக்குகின்றார். எனவே நம் ஆண்டவருக்குச் சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவையில்லை. கடவுளின் வல்லமைக் கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள்... கிறிஸ்து இயேசு வழியாக நமக்குத் தூய அழைப்பு விடுத்துள்ளார்.

## எம்மேரில்

ஆபிரகாமுக்கு, பு.சின்னப்பர் போன்றோருக்குக் கிடைத்த அழைப்பே எமக்கும் கிடைக்கப் பெற்றுள்ளது. நாம் பெலவீனர் என்பது அழைப்பு விடுத்தவருக்குத் தெரியும். நமது வாழ்வில் நேரிடும் துன்ப துரிதங்கள் சோதனைகள் நமது அழைப்புக்கும் பதில் அளிப்பதற்கு தடையாக அமைகின்றன. இயேசு தந்தையுடன் கொண்டிருந்த உறவு தான் செப உறவு. இறுதிவரை தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவுதற்கு உறுதுணையாக இருந்தது. அத்தகைய உறவு எமக்கு இல்லாத பட்சத்தில் அழைப்புக்கு உரிய பதிலைக் கொடுக்க முடியாதவர்களாகத் தத்தளிப்போம். எனவே, அப்பா பிதாவானவருடன் ஆழமான தொடர்பு கொள்வதற்கான விழிப்புறுதலையும் வல்லமையையும் தூய ஆவியானவரிடம் வேண்டுவோம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 21 திங்கள்*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| தானியேல் 9:4-11 | தி. பாடல் 79:8-9,11,13 | புனித லூக் 6:36-38 |

**பரி.நற்செய்தியிலிருந்து**

*உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள். அப்போது தான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள். மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**முதலாம் வெளிப்பாட்டிலிருந்து**

....எங்கள் கடவுளாகிய ஆண்டவர் தம் ஊழியரான இறைவாக்கினர் மூலம் தம் திருச்சட்டங்களை அளித்து அவற்றின் வழியில் நடக்குமாறு பணித்தார். நாங்களோ அவரது குரலொலியை ஏற்கவில்லை. இஸ்ராயேலர் யாவரும் உமது திருச்சட்டத்தை மீறி உம் குரலுக்கு பணிய மறுத்து விலகிச் சென்றனர்....சாபமும் கேடும் எங்கள் தலைமேல் கொட்டப்பட்டன. ஏனெனில் நாங்கள் அவருக்கு எதிராகப் பாவம் செய்தோம்.

**ஒளியில் விழிப்புறுதல்**

உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பது போல் நாங்களும்... இறைவாக்கினர்க் கெல்லாம் இறைவாக்கினரான ஆண்டவர் கூறுகின்ற அன்பு வார்த்தைக்கு உளந்திறந்து இருப்போம். அவரது குரலொலி கேட்கின்றதா? என் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதைப் போல்....

**எம் பேரில்**

இறைமகன் இரக்கமுள்ளவர், அவருடைய அன்பின் வார்த்தையூடாக அவர் பக்கம் சாயும்போது உணர்வு பூர்வமாக அவருடன் ஒன்றிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அவருடைய அளவுகடந்த அன்பின் மூலம் தவறுகள் செய்பவர்களை மன்னித்து ஏற்போம். தவறுகள் செய்வதும் மனித இனம் பிளவுகள் செய்வதும் மனித குணம். பிரிவுகள் வாழ்வில் நிலைப்பதில்லை. பொறுமைகள் பயன்தர மறுப்பதில்லை. எந்த அளவையால் நாம் மகிமை பெறவிருக்கின்றோம் என்பதற்கு விழிப்புறுவோம். இதுவே ஆண்டவர் காட்டிடும் ஞானத்தின் வழி. இதை உணர்ந்து மனம் மாற்றம் அடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 பங்குனி 22 செவ்வாய் | | விபூதி புதன் |
| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
| எசாயா 1:10,16-20 | தி. பாட 50:8-9,16-17,21,23 | புனித மத்தேயு 23:1-12 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*பின்பு இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல் நீங்கள் செய்யாதீர்கள்... தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள்... விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் ரபி என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர் சகோதரிகள். இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே....*

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவர் உங்கள் மீது வரும்போது நீங்கள் வல்லமை பெறுவீர்கள் எனக் கூறிய இயேசு ஆண்டவர், தூய ஆவியானவரினால் முழுமையாக நிரம்பி இறை தந்தையின் விருப்பத்தைக் கூறுகின்றார். ஆசைகளுக்கு அடிமையாகியுள்ள இந்த சமுதாயத்தில் இருக்கின்ற பாவகரமான அமைப்பினைத் தகர்த்தெறிந்து விட்டு புதிய ஆளுமையை ஏற்படுத்துவதற்கான தமது தூதுரைப் பணியின் முன்னிலையில் ஆண்டவர் தாகத்துடன் தோன்றி நின்றிருப்பார். உலக பெறுமதிகளால் ஈர்க்கப்பட்டு தம்மை அறியாமலே அவற்றிற்கு அடிமையாகி வரவேற்பு, செல்வம், புகழ்ச்சி பெற பாடுபடும் மக்களைக் கண்டு மனம் வருந்துகின்றார். அந்தளவுக்கு மனிதர்கள் சுய நலவாதிகளாயுள்ளர். மனிதத் தன்மை, சகோதரத்துவம் என்பனவற்றை அறியாத சமூகத்தில் வாழுகின்ற கிறிஸ்தவர்களாகிய எமது பங்களிப்பு எத்தகையானது என்பதற்கு விழிப்புறுவோம்.

## எமது பேரில்

கிறிஸ்து நாதரை தமது ஒரே ஆண்டவராக ஏற்றுக் கொண்டு அவருள் நிலைத்திருப்பவர்கள் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாவர். அவர்களுடைய ஒவ்வொரு செயலும் மற்றவர்களுக்கு சவாலாக அமையும். உலகம் தரும் தற்காலிக மதிப்புகளையும் புகழ்ச்சிகளையும் தியாகம் செய்து இறைவன் தரும் அன்பில் நிறைந்து தூதுரப்பணிக்கு முன் செல்வோம். தூய ஆவியானவருக்கு இடமளித்து இறைவனுக்கு உகந்த தாழ்மையுள்ள பணியாளர்களாக செயற்படுவோம். பேரன்பும் உண்மையும் நீதியும்நிறைவாழ்வும் கொண்ட நல்ல கிறிஸ்தவர்களாக வாழ வரம் வேண் டிஇறைவ்ன திருமுன் தோன்றி நின்று செபிப்போம்.

## செபம்

நாம் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் அரசிற்கான பணியில் ஈடுபடும் போது குடும்பத்திற்குள் பங்கிற்குள் சங்கத்திற்குள் ஆண்டவருக்குரிய மகிமையை வெளிப்படுத்த சாட்சியாளர்களாக வேண்டும். நான் எனது எனக்கு என்ற இடத்திலிருந்து வெறுமையாகி தந்தைக்கே மகிமையை உரிமையாக்குவோம். ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடக்க தாகம் கொள்வோம். வாழ்வில் முகம் கொடுக்கும் துன்பங்கள் தேவைகள் கஷ்டங்கள் என்பனவற்றிற்கு அடிமையாகாமல் இறையரசைக் கட்டியெழுப்பும் பணிளாகர்களாக செயற்படுவதற்கு வர்லமை தந்தருளுமாறு கேட்டு செபிப்போம் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 23 திங்கள்*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| தானியேல் 9:4-11 | தி. பாடல் 79:8-9,11,13 | புனித லூக் 6:36-38 |

**பரி.நற்செய்தியிலிருந்து**

*அக்காலத்தில் மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல. தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார் (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**எம் பேரில்**

சாதாரணமாக எமது மனித தலைமைத்துவம் என்ன தலைவர் என்ன சொல்கிறாரோ அதை செய்வது தான் சீடனின் கடமை. அது மாணவப்பருவமாக இருந்தால் என்ன? குடும்பத்திலாக இருந்தால் என்ன? தொழில்புரியும் இடத்தில், அரசியலில் எங்கும் தலைவர் கூறுவதை செய்வதே இன்றைய நிலை.

ஆனால், நற்செய்தியில் இயேசுவின் தலைமைத்துவம் சீடர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றது. "நான் குடிக்கப்போகும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?" என்று செபதேயுவின் மனைவியிடம் இயேசு வினவுகின்றார். இயேசுநாதர் இந்த உலகில் மானிடமகனாய் பிறப்பதற்கு மரியாளிடம் அனுமதி கேட்கின்றார். மனுமகன் பிறந்ததன் பின் எமக்கிருக்கும் பசி, கோபம், அநீதிகாக்காக வேதனைப்படும் சகல உணர்வுகளையும் இயேசு கொண்டிருந்தார். மேலும் அவர் இன்றைய நற்செய்தியில் நாங்கள் எருசலேம் செல்கின்றோம். அங்கு எனக்கு தலைமைக்குருக்களும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்பட்டு, மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து சிலுவையில் அறைவார்கள் என்று தனக்கு ஏற்படப்போகும் நிந்தை அவமானத்தை சீடர்களுக்கு விளங்கப்படுத்தியும் அதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

நாமும் இந்தத் தவக்காலத்தில் இருக்கும் உபவாசத்தில் பிறரது பசியில், எம் பசியையும், பிறரது வேதனையில் எம் வேதனையையும் பிறரது துன்பத்தில் எமது துன்பத்தையும் இயேசுவின் வல்லமையில் தாங்குவோம். மனதார மன்னிப்பு கொடுப்போம்.

**செபத்திற்கு உள்ளாகுதல்**

ஆண்டவரே நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன். நீரே என் கடவுள். என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது. என் எதிரிகள் கையினின்றும், என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தரளும். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2011 பங்குனி 24 வியாழன்* | | *விபூதி புதன்* |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *எரேமியா 17: 5-10* | *திருப்பாடல் 1:1-6* | *புனித லூக்காஸ் 16: 19-31* |

## முதலாம் வெளிப்பாட்டிலிருந்து

ஆண்டவர் கூறுவது இதுவே. மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர். ..... ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர். ஆண்டவரே அவர்களது நம்பிக்கை. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பாவார். அது நீரோடையை நோக்கி வேர் விடுகின்றது.....

## பரி. நற்செய்தியிலிருந்து

*"செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள் தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்..... இப்போது இலாசர் ஆறுதல் பெறுகின்றார் நீயோ மிகுந்த வேதனைப் படுகின்றாய்......*

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! *வழியும் உண்மையும், வாழ்வும் நானே என மொழிந்த ஆண்டவர் இயேசுவின்* பாதையில் செல்ல என்னை வழி நடத்தும்.

தமது செல்வத்தில் தானே இன்புற்று பிறர் நலம் தேடாது வாழ்ந்த செல்வந்தரைப் பற்றி இயேசு ஆண்டவர் கூறுவது என்ன? என்பதை இன்றைய முதலாம் வெளிப்பாடு எமக்கு தெளிவாக்கித் தருகின்றது. தன் வாழ்வில் முடிவில்லாத வாழ்வின் இன்பத்தை சுவைத்திட தடையாக இருக்கின்ற தடைச் சுவரை செல்வந்தர் அறிந்து கொள்ள-வில்லை. முடிவு இறை அன்பின் அரவணைப்பில் வாழ தவறுகின்றார்.

*ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர். ஆண்டவரே அவர்களது நம்பிக்கை* இந்த நிலையைத் தம் முடியாமையிலும் இலாசர் அனுபவித்தார். இவ்வுலகில் நாம் அனுபவிக்கின்ற துன்ப துயரங்கள். மேலுலகில் நாம் அனுபவிக்கவிருக்கின்ற இன்பத்திற்கு ஈடாகாது என்பதை அவர் அறிந்திருந்தார். இலாசர் இறைவனுடைய அன்பில் நிலைத்திருந்ததால் நீர் அருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பானார். அவருக்குள் அச்சம் ஏற்படவில்லை. ஏனென்றால் தன் முடியாமையிலும் சர்வ வல்லவரில் நிறைவைக் கண்டார்.

## அனுபவம்

ஒன்றைப் பத்தாக்கி தீர்ப்பிடுவதையே தம் தொழிலாகக் கொண்டிருந்த சிலரால் காயப் படுத்தப்பட்ட ஒரு இலாசர் இருந்தார். எங்கு சென்றாலும், அவரை பலரும் நோக்குவது தவறான கண்ணோட்டத்-திலாகும். இதனால் வேதனையை அனுபவித்த இலாசர் தம்மை முழுமையாக அறிந்தவர் ஆண்டவர் ஒருவரே என்பதில் மாத்திரம் இன்பம் கண்டார். **ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்-றோர்** இந்த நம்பிக்கை பெருகப் பெருக வெப்பமிகு தாக்கங்கள் ஏற்படுகின்ற போதெல்லாம் அச்சம் எதுவுமின்றி ஆண்டவரில் தரித்திருந்தார். ஆதலின் தம்மைத் துன்புறுத்து பவர்களோடு ஒற்றுமைப்படுவதற்கு தேவையான பொறுமையின் கனியை அவர் சுவைத்து வருவதுடன், தம்மை பீடனைப்படுத்துபவர் களுக்காகவும் இறைவன் திருமுன் தோன்றி நிற்கும் வரப்பிரசாதம் அவருக்குக் கிடைத்திருப் பதாகக் கூறினார்.

## செபம்

ஆற்றலாலும் அல்ல
சக்தியாலும் அல்ல. ஆண்டவரின்
ஆவியாலே ஆகுமே ஆகுமே
ஆண்டவரின் ஆவியாலே ஆகுமே.
பாவிகள் மீட்புப் பெறல்
ஆகுமா? ஆகுமே. பாலைவனம்
சோலைவனம் ஆகுமா? ஆகுமே.
திருச்சபை ஓர் உடல் ஆகுமா?
ஆகுமே திருச்சுதன் ஆவியால்
ஆகுமா ஆகுமே.

ஆவியானவரிடம் சரண-டைந்து, மீட்பாளரில் மகிழ்ச்சி கொள்வோம். ஆண்டவரே எமது மீட்பு நான் யாருக்கு அஞ்ச வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 2011 பங்குனி 25 வெள்ளி | | கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழா | |
| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி வெளிப்பாடு |
| எசாயா 7:10-14, 8:10 | தி. பாட 40:7-9,10,11 | எபிரே 10:4-10 | புனித லூக் 6:36-38 |

## முதலாவது வெளிப்பாடு

அதற்கு எசாயா தாவீதின் குடும்பத்தாரே நான் சொல்வதைக் கேளுங்கள்... ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் இம்மானுவெல் எனப் பெயரிடுவர்...

## பரி. நற்செய்தியிலிருந்து

***வானதூதர் மரியாவுக்குத் தோன்றி அருள் மிகப் பெற்றவரே வாழ்க. ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்றார்.... வான தூதர் அவரைப் பார்த்து மரியா அஞ்ச வேண்டாம். கடவுள் அருளைக் கடண்ட-டைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக் இயேசு என்னும் பெயரிடுவீர்.. அவர் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்.. பின்னர் மரியா நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்றார் (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுதல்

கிறிஸ்து பிறப்பின் அறிவிப்புப் பெருவிழாவை திருச்சபையானவள் இன்றைய தினம் விமரிசையாக கொண்டாடுகிறன்றது. இன்றைய தினத்தின் வாசகங்களினூடாக இறைமகனின் உள்ளரங்கத்தினைக் காண தூய ஆவியானவரே, எம்மேல் இறங்கிவந்து எமக்கு வழிகாட்டும். ஆண்டவரின் மறை இரகசியமான திட்டதிற்கு கீழ்ப்படியாமையினால் ஆதிபெற்றோரிடம் இருந்து வழிந்து வந்த பாவத்திற்கு அடிமையாகி இருந்த மக்களை கனிவிரக்கத்துடன் நோக்கிய தந்தை அம் மக்களைப் பாவத்தில் இருந்து மீட்பதற்காக இவ்வுலகிற்கு அனுப்பபட்ட அடையாளம் அவர் தான் என்பதை எசாயா இறைவாக்கினரின் இறை வாக்குகள் மூலம் காணும் அவர் அப்பாவின் திரு விருப்பத்தினை நிறைவேற்றிட முழுமையாகத் தம்மை அர்ப்பணிக்க முன்வந்தார். பேறுபெற்ற தாயாரை இறை அப்பா மீட்பின் பணிக்காக ஆதியில் இருந்தே அவரைத் தேர்ந்து எடுத்துள்ளார் என்பதைக் காண்கின்றார். காபிரியேல் வானதூதர் மங்களம் கூறிய கணத்தில் இருந்து ஆண்டவரின் தாயாராவதற்கு மரிய அன்னைக்கு ஆண்டவர் மூலம் விடுத்த அழைப்பாகும். வானதூதரின் மங்கள வார்த்தைகளைக் கேட்டு கலங்கி நிற்கும் அம்மாவைப் பார்த்து வானதூதர் மீண்டும் தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். உம்மிடம் பிறக்கப்போகும் அக்குழந்தை தூயது அக்குழந்தை இறைமகன் எனப்படும் என மொழிந்தார்.

## எம் பேரில்

இறை அரசற்கான மகனாக மகளாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் நாளாந்தம் முகங்கொடுக்கும், பிரச்சனைகள், கஸ்டங்களிலும் இறை திருவுளத்திற்கு தலை வணங்கி ஏற்றுக்கொள்வற்குத் தயாராக இருக்கின்றோமா? வார்த்தையானவரை எமது இதயங்களில் மனவுருவாக்கும் தாகம் இருக்கின்றதா? மனஸ்தாபத்துடன் ஆண்டவர் பக்கம் திரும்புவோம். தூய ஆவியானவரின் வல்லமையால்நிரம்பிய வண்ணம் வார்த்தையானவரை எமது இதயங்களில் மனவுருவாக இடமளிப்போம்.

## செபத்திற்குள்ளாகுதல்

அன்பின் ஆண்டவரே, பெலவீ-னமான எமது இதயங்களின் உமது திருக்குமாரனை மனவுருவாக்கிய வண்-ணம் உமது திரு விருப்பத்திற்கு இடம-ளித்து வாழ உமது பரிசுத்த ஆவியின் வல்லமையால் எம்மை வழிநடத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 26 சனிக்கிழமை*

| | | |
|---|---|---|
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *எசாயா 7:14-15, 18-20* | *தி. பாட 103:1-4,9-12* | *புனித லூக் 15:1-3,11-13* |

## பரி. நற்செய்தியிலிருந்து

*வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக்கேட்க அவரிடம் நெருங்கி வந்தனர். பரிசேயரும் அவரிடம் நெருங்கி வந்தனர். பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே..... "ஆனால், விஜலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்து விட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே இவனுக்காக கொழுத்தக் கன்றைக் அடித்திருக்கின்றீரே என்றார். அதற்கு தந்தை மகனே! நீ எப்போதும் என்னுடன் இருக்கின்றாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்து கொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில், உன் தம்பி இவன் இறந்துபோய் இருந்தான். மீண்டும் உயிர் பெற்றுள்ளான். காணாமல் போயிருந்தான். மீண்டும் கிடைத்துள்ளான். என்றார்*

## ஒளியில் விழிப்புறுதல்

வாரும் படைப்பாளரே வாரும். வந்து இன்றைய உயிருள்ள வார்த்தையை உள்ளாளத்தில் ஏற்றுவாழ தூய ஆவியானவரே எமக்கு துணை செய்யும்.

## எம் பேரில்

கருணையுள்ள அப்பா, ஊதாரி மகன், விட்டுக்கொடுக்காத அண்ணன். மூன்று கதாபாத்திரங்கள். மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் தவறு செய்வது இயல்பு. ஆனாலும், நம்மில் எத்தனைபேர் எமது பிழைகளை ஒத்துக்கொள்கிறோம். நான் தவறு (பிழை) செய்துவிட்டேன். இதை திருத்த வேண்டும்.

ஊதாரி மகன் பசியின் கொடுமையில் இருக்கும்போதுதான் "என் தந்தையின் இல்லத்தில் எவ்வளவோ உணவு இருக்க நான் இங்கு பசியால் ஏன் மடிய வேண்டும்?" என்று தன்னுடைய உண்மை நிலையை காணுகின்றார். கருணை உள்ள அப்பா "மகன் வருவானா என்று நாள் தோறும் வாசலில் விழிமேல் விழிவைத்து மகனின் வரவை எதிர்நோக்குகின்றார். "அண்ணன் தம்பி வந்த வெய்தியைக் கேட்டு வீட்டிற்கு உள்ளே வர மனம் இல்லாமல் தந்தையை வெளியே வருமாறு அழைத்து தனது நியாயங்களைச் சுட்டிக்காட்டுகின்றார்.

அநேகமாக இந்த மூன்றாம் நிலையில்தான் எம்மில் அநேகர் வாழுகின்றோம். நான் தினசரி பூசைக்கு.., பரிவேதாகமம் வாசிப்பு.., குடும்பமாக என்று எமது நல்லத்தன்மைகளை எடுத்துச் சொல்வோம். ஆனால், திரும்பி வந்த தம்பியை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவன் பாவி, அவன் ஊதாரி என்று தள்ளிவைத்துவிடுவோம்.

முதலாம் வெளிப்பாட்டில் எமது பாவங்களை இறைவன் ஆழ்கடலில் எறிந்து விடுகின்றார். பாவம் கடலில் எறியப்படவேண்டுமென்றால், அந்தப்பாவங்களை நாம் உணர வேண்டும். தவறுகளை இறைவன் முன் ஒத்துக்கொள்ளவேண்டும். அதை இறைவன் ஆழ்கடலில் எறிந்து விடுவார்.

அன்பான ஆண்டவரே இன்றைய நாளில் மற்றவர்களின் பிழைகளை தவறுகளைக்காணாமல், என்னைக் காண என் உள்மனதைக்காண படைப்பாளரே எனக்கு உதவிசெய்யும்.

## செபிப்போம்.

என் ஆத்துமாவே கர்த்தரைத்தோத்தரி, என் முழு உள்ளமே, அவருடைய நாமத்தைத் தோத்தரி, என் ஆத்துமாவே கர்த்தரைத் தோத்தரி, அவர் செய்த சகல உபகாரணங்களையும் மறவாதே. (பழைய பரிவேதாகமம். சங் 103:1-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| *2011 பங்குனி 27 ஞாயிறு* | | | *தவக்காலம் 3வது ஞாயிறு* |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *இரண்டாம் வாசகம்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *வி. ப 17:3-7* | *தி. பாட 95:1-2,6-9* | *உரோ 5:1-2 ,5-8* | *புனித யோவா 4:5-42* |
| | | | *அல்லது 4:5-15, 19-26,39-42* |

நாம் அனைவரும் விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு என்பவற்றினால் நிரம்பியவர்களாக வாழ்க்கையில் முழு மாற்றத்தை அனுபவித்து வாழுவதற்காக வேண்டி தவக்காலத்தின் மூன்றாம் வாரமாகிய இன்றைய நாளில் அழைக்கப்படுகின்றோம். இறை விருப்பத்தை தமது உணவாக்கிக்கொண்ட இறை மகன் இயேசு வழியாக உலக பெறுமதிகளைத் தேடி அலைந்து களைப்புற்றிருப்போருக்கு, இறை தகப்பனது வழிந்தோடுகின்ற அன்புடன் தொடர்பு கொள்வதற்கான தாகத்தைப் பற்றி இன்றைய வெளிப்பாடுகள் எம்மை விழிப்புறுத்துகின்றன.

நிரந்தரமமாக எம்மோடு இருக்கின்ற தூய ஆவியானவரினால் அதாவது இறைவனுடைய அன்பினால் நிரப்பப்படுவதற்கான தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம். அதற்கான வல்லமையை வேண்டுவோம். எமது நிலையாளரான இறை மகனோடு இணைந்து அப்பா பிதாவானவரைப் புகழுவோம்.

## முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

***அங்கு தண்ணீரின்றித் தவித்தால் மக்கள் மோசேயை எதிர்த்து முறுமுறுத்து நீர் எகிப்திலிருந்து எங்களை வெளியேறச் செய்தது எங்ளையும், எங்கள் பிள்ளைகளையும், கால் நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா என்று கேட்டார்கள். மோசே ஆண்டவரிடம் இந்த மக்களோடு நான் என்ன செய்வேன்? இன்னும் கொஞ்சம் போனால் என்மேல் கல்லெறிவார்களே! என்று கதறினார். ஆண்டவர் மோசேயிடம் ...இதோ, நான் அங்கே ஒரேயில் உள்ள பாறையில் உனக்கு முன் நிற்பேன். நீ பாறையை அடி; மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்.***

## ஒளியில் விழிப்புறுதல்

இஸ்ரவேல் மக்களோடு விடுதலைப் பயணத்தில் ஈடுபட்டிருந்த மோசே அனுபவித்த இன்னல்கள், முடியாமைகள், பெலவீனங்கள், அனாதரவான நிலைகள் மத்தியில் இறை தகப்பனின் முன்னிலையில் கதறுகின்ற அனுபவமானது கிறிஸ்து ஆண்டவரது இறை பணிக்கு மெருகூட்டுவதாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மோசே எப்போதும், எந்த நிலைகளிலும் அப்பா தந்தையின் முன்னிலையில் நின்றவாறு அவரது திருவுளத்தைத் தேடினார். மக்களது தாகத்தைத் தீர்ப்பதற்காக வேண்டி இறை தகப்பனானவர் தமது படைப்புக்களையே பிரயோசனத்திற் கெடுக்கும் விதத்தைக் காணுகின்ற இறைமகன் அதன் வழியாக தந்தையின் வல்லமை, மகிமை, மாட்சிமை வெளிப்பாடாகுவதையும் கண்டிருப்பார். மக்களது உடல் தாகத்தை மாத்திரமன்றி ஆன்மீக தாகத்தையும் தந்தையின் அன்பினால் தீர்க்கின்ற நீரூற்று தாம் என்பதையும் உணர்ந்திருப்பார். அத்தோடு கணத்திற்குக் கணம் தந்தையின் குரலொலிக்குச் செவிமடுத்தவாறு, அதற்கு விழிப்புற்றவாறு அவரது திருவுளத்திற்குப் பிரமாணிக்கமுள்ளவராகியவாறு உலகோரிடமிருந்து வருகின்ற சவால் மிகுந்த அனுபவத்தை ஸ்பரிசித்தவாறு தெய்வீகமான இறை புத்திரத் தன்மையின் அன்பினால் நிரம்பியவர், இயேசு ஆண்டவரேயாவார்.

## இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து

நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள நாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம். நாம் இப்போது அருள் நிலையைப் பெற்றுள்ளோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்து மீது கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையால் தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்துள்ளது.... நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.... நாம் பாவிகளாய் இருந்த போதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டினார்...

## ஒளியில் விழிப்புறுதல்

விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு என்பன காரணமாக ஏற்படுகின்ற இறைவன் - மனிதன் இடையிலான தொடர்பு பற்றி பவுலடிகளால் தமது சங்கத்தினதும், பெருமகிழ்வினதும் அனுபவத்தை ஸ்பரிசிப்பதற்கான அழைப்பு அகிலத்தினருக்கும் உண்டு. ஆவியானவரினால் எப்போதும் நிரம்பி, நிலைத்திருப்பதற்காக வேண்டி அழைப்பு விடுக்கின்ற பவுலடிகளார் கிறிஸ்து ஆண்டவரிடமிருந்து பெற்ற அன்பினதும் மீட்பினதும் அனுபவத்திற்கு அச்சமின்றி சாட்சி பகர்வதைக் காண்பதற்கு முடியுமாகிறது. புத்திரத்தன்மையின் உரிமையை பெற்றுள்ள எம் அனைவருக்கும் விசுவாசத்தின் வழியாகவே சாட்சி பகர்வதற்கு முடியுமாகும்.

## பரி. நற்செய்தியிலிருந்து

***...அவ்வூரில் யாக்கோபின் கிணறும் இருந்தது. பயணத்தால் இளைப்புற்றிருந்த இயேசு கிணற்று ஓரமாய் அமர்ந்தார். சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் மொள்ள வந்தார். இயேசு அவரிடம் குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும் என்று கேட்டார்... நீர் யூதர். நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி? கடவுளுடைய கொடை எது என்பதையும் குடிக்கத் தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர். அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்....***

## ஒளியில் விழிப்புறுதல்

சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கின்ற இறைமகனானவர், தூய ஆவியானவருக்கு விழிப்புற்று, இறை விருப்பத்திற்கேற்பவே செயற்பட்டார். தந்தையின் அன்பு பாரபட்சமற்றது என்பதை அவரது வார்த்தைகள் வழி வெளிப்பாடாகின்றது. ஆதி முதல் மக்கள் வணங்கிய இறைவன் அவர்கள் மத்திக்கு வந்துள்ளார் என்பதை அவரது வார்த்தைகள் வெளிப்பாடாக்குகின்றன போலும். திரித்துவ சங்கத்தின் தொடர்பு பற்றி விழிப்புறுத்துகின்ற ஆண்டவர் நேர்மையான உள்ளத்தோடு அல்லது மனம் வருந்தியவாறு திரும்பும் போது, இறையன்போடு கூடிய சதாகால வாழ்வுக்கான உரிமை பெறுவீர் என்று கூறுகின்றார்.

நான் உண்பதற்குரிய உணவு ஒன்று உண்டு. அது உங்களுக்குத் தெரியாது என்ற வெளிப்பாட்டிற்கமைய தாம் மக்களுக்காக வேண்டி உணவாகப் போவதாக அல்லது உடையது நொறுங்குவதற்காக இருந்த தாகம் எத்துணை உன்னதமானது? அத்தோடு அவர் மிகுந்த விடுதலையோடும், நேர்மையான உள்ளத்தோடும் தமது வாழ்வையே, ஏன் உயிரையே தந்தையிடம் உயர்த்தினார் என்பது தெளிவாகிறது. இறை புத்திரத் தன்மையின் உரிமையைப் பெற்றுள்ள நாமும், அப்பா பிதாவானவரின் திருவுளத்தை மாத்திரம் நிறைவேற்றுவதற்கான விழிப்புறுதலையும், தாகத்தையும் வல்லமையையும் வேண்டுவோம்.

இறையப்பாவின் திருவுளத்தை உணவாக்கிக் கொண்ட வாழ்வு தரும் ஊற்றாகிய இயேசு ஆண்டவரே, அப்பா பிதாவானவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக வல்லமையையும், ஒளியையும் ஆவியானவர் வழியாத் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 28 திங்கள்*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|---|
| 2அரசர் 5:1-15 | தி. பாட 42:1-2,43:3-4 | எபிரே 10:4-10 | புனித லூக் 4:24-30 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தார். தமது வழக்கத்தின்படி ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்றுவாசிக்க எழுந்தார். நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. உண்மையாக நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்து, நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ராயேலர் இடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை. சீதோனைச் சேர்ந்த, சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம் பெண்ணிடமே அனுப்பப்பட்டார். மேலும் இறைவாக்கினர் எலிசாவின் காலத்தில் இஸ்ரயேலரிடையே தொழுநோயாளர்கள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களுள் எவருக்கும் நோய் தீங்கவில்லை. சரியாவைச் சேர்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது என்றார். தொழுகைக் கூடத்தில் இருந்த யாவரும் இவற்றைக் கேட்டபோது சீற்றம் கொண்டனர்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

என் ஆன்மாவின் அன்பார்ந்த-வரான தூய ஆவியானவரே!

இந்நற்செய்தி பகுதிக்குள் இறை இயேசுவின் உள்ளாந்தரத்தைக் காண என்னை ஒளிமயமாக்கியருளும். புத்திரத் தன்மையின் உரிமையுடன் செயல்படும் இயேசு தூதுப் பணிக்காகப் பல திசைகளிலும் சென்று போதிக்கின்றார். நோய்களைக் குணமாக்குகின்றார். பேய்களை ஓட்டுகின்றார். செவிடர் கேட்கவும் குருடர் பார்க்கவும் செய்கின்றார். பின் தாம் பிறந்து வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு மீட்புப் பணிக்கா வருகின்றார். அங்கு அவரை ஏற்றுக் கொள்ள மனமில்லாதவர்களைக் காண்கின்றார். துயரமடைகின்றார். சீதோனைச் சேர்ந்த கைம் பெண்களைப் பற்றியும் சீரியாவைச் சேர்ந்த நாமானைப் பற்றியும் கூறும் இயேசு, தந்தையின் திருவிருப்பம் எப்படிப்பட்டது என்று எடுத்துக் காட்டுகின்றார். தூதுச் சேவையின் நோக்கம் அடிமைத்தனத்-திலிருந்து மீட்பும், பார்வையற்றோர் கண் திறக்கப்படுதலும் ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடைதலும் எடுத்துக் கூறப்படுகின்றது. ஆனால் இங்கே வெறுப்பின் மத்தியில் வாழும் அவநம்பிக்கை கொண்டுள்ளவர்கள் மத்தியில் தொடர்ந்து மீட்புப் பணியைச் செய்ய முடியாததையிட்டு மனம் நொந்திருப்பார்.

## எம் பேரில்

எமது வாழ்வை இத்தவக்-காலத்தில் சற்று திரும்பிப் பார்ப்போம். இயேசு நமது உள்ளங்களைத் தேடி வந்து நம்மோடு உறவாட கதைக்க ஆயத்தமாக இருக்கின்றார். நாம் அவருக்கு எந்தளவுக்கு உளம் திறந்து இடமளிக்கின்றோம்? மற்றர்களை இறைவனின் வார்த்தைகளுக்கு உள்ளாக்குவதற்கு எவ்வளவு தூரம் செயற்படுகின்றோம். எமது சோதனை வேதனைக்கு முகம் கொடுக்க முடியாமல் எமக்குள் இருக்கும் தூய ஆவியானவருக்கு இடமளிக்க முடி-யாமல் இருக்கின்றோம்?

## செபம்

அப்பா தந்தையே! உமது மகன் உமது விருப்பத்தை இறை அரசைக் கட்டி எழுப்பப் பயன்படுத்தியதைப் போல நாமும் உமது இறையரசைக் கட்டியெழுப்ப உமது வல்லமையைத் தாரும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2011 பங்குனி 29 செவ்வாய்* | | *விபூதி புதன்* |
| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
| *தானி (இணை.ச) 1: 2. 11-1* | *தி. பாட 25: 4-9* | *பு.மத்தேயு 18:21-35* |

## முதலாம் வெளிப்பாட்டிலிருந்து

.... நொறுங்கிய உள்ளமும் தாழ்வுற்ற மனமும் கொண்ட நாங்கள் ஏற்றுக் கொள்ளப் படுவோமாக! அவ்வாறே எமது பலி இன்று உம் திரு முன் அமைவதாக! நாங்கள் முழுமையாக உம்மைப் பின்பற்றுவோமாக! ஏனெனில் உம்மில் நம்பிக்கை வைப்போர் வெட்கத்திற்கு ஆட்பட மாட்டார். இப்பொழுது நாங்கள் முழு உள்ளத்துடன் உம்மைப் பின்பற்றுகின்றோம்..

## பரிசுத்த நற்செய்தியிலிருந்து

***.... உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து என்னைப் பொறுத்தருள்க நான் திருப்பிக் கொடுத்து விடுகின்றேன். என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார். ஆனால் அவன் அதற்கிசையாது, கடனைத் திருப்பி அடைக்கும் வரை அவரைச் சிறையில் அடைத்தான். .....நான் உனக்கு இரக்கம் காட்டியது போல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டுமல்லவா?.... இப்போது உங்கள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார். (நற்செய்தியைத் தியானத்துடன் வாசிக்கவும்.)***

## ஒளியின் விழிப்புறுதல்

ஆவியானவரே, அன்பை சுவைத்து அதன் சுவையை மற்றவர்-களுடன் பகிர்ந்து கொள்ள என்னை வழிநடத்தியருளும்.

கடவுள் அன்பார்ந்தவர். நொறுங்கிய தாழ்வுற்ற உள்ளத்தவர்களை அன்போடு அரவணைப்பவர். அவர்கள் குரலொலிக்கு செவி சாய்ப்பவர். என்பதை இன்றைய வார்த்தை வழியாக இறை மகனானவர் எமக்கு வெளிப்படுத்துகின்றார். அதுமாத்திர மல்ல. அன்பினைச் சுவைப்பவர் அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும் இன்றைய உவமை வழியாக வெளிப்படுத்துகின்றார். சுயநலம் கொண்டவர் மற்றவரை மதிப்பதில்லை. மற்றவரை மன்னிப்பதில்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றார். ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றுகின்றவர் தம்மை நேசிப்பது போன்று மற்றவர்களையும் நேசிக்கின்றார். ஏனெனில் அன்பின் வல்லமையே அவரை ஆட்கொண்டு வழிநடத்துகின்றது.

ஆகவே நாம் அன்பின் வல்லமையால் நாம் ஆட்கொள்ளப்பட என்ன செய்ய வேண்டும். கிறிஸ்து நாதர் என்ன செய்தார். என்பதைத் தியானிப்போம்.

எவ்வேளையிலும் தந்தையின் திருமுன்னிலைக்குச் சென்று தந்தையுடன் உறவாடினார். ஆம் செபத்தின் வல்லமையை நாம் அனுபவிக்காவிடில், நாம் வழிநடத்தப்படுவது சுயநலம் என்கின்ற சாத்தானின் பிடிக்குள்ளாம். அன்பின் வல்லமையால் நாம் நிரம்பும் போது, இரக்கம், தயவு, கருணை, மன்னிக்கும் மனப்பான்மை, பொறுமை போன்ற நற்கனிகளினால் நாம் நிரப்பப்படுவோம். ஆகவே நாம் எம் வாழ்க்கை நிலையை நன்கு ஆராய்ந்து பார்ப்போம். நான் தூய ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றேனா? என் சகோதர சகோதரிகளை மன்னிக்கின்றேனா? அன்பின் வல்லமையை ஆடையாக அணிந்து கிறிஸ்து ஆண்டவருடன் பயணம் செய்வோம்.

## செபம் என்றால்.....

**நான் பேச அவர் கேட்பது,**
**அவர் பேச நான் கேட்பது,**
**இருவரும் பேசுவதில்லை,**
**இருவரும் கேட்கின்றோம்.**
**இருவரும் பேசுவதில்லை,**
**இருவரும் கேட்பதுமில்லை.**
**பூரண அமைதி-**
**இறைவன் அரவணைப்பில் தரித்திருத்தல்**
**ஆகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 30 புதன்*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| இ.சட்டம் 4:1,5-9 | தி. பாட 147:12-13,15-16,19 | புனித மத்தேயு 5:17-19 |

## பரி. நற்செய்தியிலிருந்து

*திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழியாதவரை திருச்சட்டத்திலுள்ள அனைத்தும் நிறைவேறாதவரை, அச்சட்டத்தின் மிகச் சிறியதோர் எழுத்தோ அல்லது எழுத்தின் ஒரு கொம்போ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். எனவே இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி, அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவையனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

ஆண்டவரே அன்பின் ஆவியானவரே, உமது அன்பினால் என்னை நிரப்பி வழிநடத்தும்.

திருச்சட்டம் இறைவன் தந்தது. இறைவாக்கு இறைவன் உரைப்பது. அந்நாட்களில் இயேசு பூமியில் வாழ்ந்த காலத்தில் பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர்கள் அனைவரும் இயேசு இறைவனின் சட்டத்திட்டங்களை மாற்ற, இல்லாதொழிக்க வந்திருக்கிறார் என நினைத்தார்கள். அவர் இறைவனுக்கு விரோதமாக செயல் படுபவர் என்று பயந்தார்கள். ஆகையினால் அவரது வார்த்தைகளில், செயல்பாடுகளில் குற்றம் கண்டு பிடித்து அவரை இல்லாதொழிக்க முனைந்-தார்கள். அவர்களுக்கு தெளிவுபடுத்தவே இயேசு நான் திருச்சடடத்தையோ, இறைவாக்குகளையோ அழிக்க வரவில்லை என்று கூறுகின்றார். அத்தோடு ஒரு அச்சுறுத்தலையும் விடுக்கின்றார். இறைவனின் கட்டளை-களில் ஒன்றையேனும் மீறி, அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் என்று கருதப்படுவார். இறை தந்தையினால் மோசேக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்களை இயேசு போதித்து நிறைவேற்றினாலும் இதனை முறையாக பரிசேயரால் விளங்கிக் கொள்ள முடியாததால் பிளவுகள் ஏற்பட்டதை இயேசு கண்டு அன்பு என்னும் சட்டத்தை அவர் மக்கள் மனதில் பதிய வைத்தார்.

## எம் பேரில்

நாம் எவ்வாறு வாழ்கிறோம்? இறைவனின் கட்டளைகளை சரியாகக் கடைப்பிடித்து அதனை மற்றவர்களுக்கு கற்பிக்கிறோமா அல்லது ஊருக்கு உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லை என்ற கூற்றின் படி வாழ்கிறோமா? இறை சந்நிதியில் விண்ணரசில் நாம் பெரியவர்களாகக் கருதப்பட வேண்டும் என்ற ஆவல் எம்முள் இருக்கிறதா? அப்படியாயின் இறைவனுடைய வார்த்தைகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ முயற்சிப்போம். அதற்குரிய தெளிவினை தூய ஆவியானவர் எமக்குத் தர வேண்டும் என்று அவரது வல்லமையை தாழ்ச்சியோடு வேண்டி நிற்போம். சட்டத்தை அல்ல இறை அன்பில் வாழ நாம் முயல்வோம்.

## செபம்

விண்ணும் மண்ணும் ஒழிந்து போம். எனது வார்த்தைகளோ ஒருபோதும் ஒழியாது என்று சொன்ன ஆண்டவரே, உமது வார்த்தையின் சரியான அர்த்தத்தைப் புரிந்து அதனை முறையாகக் கடைப்பிடித்து வாழ தூய ஆவியின் மூலம் நிறைவாக எமக்குத் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2011 பங்குனி 31 வியாழன்*

| *முதலாம் வெளிப்பாடு* | *பதிலுரைப் பாடல்* | *நற்செய்தி வெளிப்பாடு* |
|---|---|---|
| *எரேமி 7:23-28* | *தி. பாட 95:1-2,6-9* | *புனித லூக் 11:14-23* |

## பரி. நற்செய்தியிலிருந்து

*ஒருநாள் இயேசு பேச்சிழந்த ஒருவரிடமிருந்து பேயை ஓட்டினார். ...கூட்டத்தினர் வியந்து நின்றனர். அவர்களுள் சிலர் பேய்களின் தலைவனாகிய பெயல் செபூலைக் கொண்டே இவன் பேய்கள் ஓட்டுகிறான் என்றனர். வேறுசிலர் அவரைச் சோதிக்கும் நோக்கத்துடன் வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளம் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து.... நான் பெயல் செபூலைக் கொண்டு பேய்கள் ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? .. நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா? (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

இயேசு ஆண்டவர் பேச்சிழந்தவரைச் சுகமாக்கும் புதுமையைக் கண்டு தாங்கமுடியாத, அவரை ஏற்றுக் கொள்ளாத, அவருக்கு செவிசாய்க்காத சிலர், இவர் பேய்களின் தலைவனைக் கொண்டே பேய்களை ஓட்டுகிறான் எனக் குற்றம் சாட்டுபவர்களைப் பார்த்து வேதனைப்படும் இறைமகனின் உள்ளரங்கத்தைக் காண தூய ஆவியானவரே எம்மை வழிநடத்தும்.

வானத்தில் இருந்து ஏதேனும் ஓர் அடையாளம் கேட்கும் பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்களின் மன நிலையைக் காண்பதற்கு தூய ஆவியானவர் அவருக்கு வழிகாட்டினார். இறை அரசைப் பற்றிய தாகம் அவரின் உள்ளரங்கத்திலிருந்து வழிந்தோடியது. உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை என எடுத்துக் கூறும் அளவிற்கு இறை அப்பாவின் அன்பில் மூழ்கியிருந்தார். இறை அரசின் செயற்பாட்டிற்கு தடையாக இருப்பவற்றை இனங்கண்டு தக்க பதில் கொடுப்பதற்கு தயங்கவில்லை. இறை அரசிற்குத்தடையாக இருப்பவர்களின் அழிவையும் எடுத்துக் காட்டப் பின்வாங்க வில்லை. இறையாடசி உங்களிடம் வந்துள்ளது அல்லவா என எடுத்துக் காட்டியும்அதை ஏற்காததைக் கண்டு வேதனைப்படுவதுடன் என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கின்றனர். என்னுடன் சேர்ந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கின்றனர். எனக் குற்றம் சாட்டுவதுடன் இன்று எம்மையும் விழிப்பூட்டுகின்றார்.

## எம் பேரில்

இறை அரசிற்கான மகனாகவும் மகளாகவும் இயேசுவின் பின்செல்வதற்கு அழைப்புப் பெற்ற எமக்கு இன்றைய நற்செய்தி ஒரு சவாலாகும். நாம் பெற்ற புத்திரத் தன்மையின் உரிமையுடன் எமது அழைப்பிற்கு சாட்சிபகர முன்வருகின்றோமா? இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா? என இயேசு எம்மையும் பார்த்து கேட்கும் கேள்விக்கு எமது பதில் என்ன? இறையாட்சி எம்மிடம் வந்துள்ளது என்பதை விசுவாசிக்கின்றோமா? தவக்காலத்திற்கு அடி எடுத்து வைத்துள்ள நாம் எமது பெலவீனங்களுக்கு விழிப்புறுவோம். மனந்திருந்தி மனமாற்றத்துடன் இறை அரசிற்காக சாட்சி பகர எம்மை வழி நடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.

## செபம்

அன்பின் ஆண்டவரே, உமது திருக்குமாரன் பேரில் கண்களை ஏறெடுத்து அவர் வழி சென்று உமது அரவணைப்பிற்குள்ளாவதற்கு ம் பரிசுத்த ஆவியின் வல்லமையால் எம்மை அபிஷேகம் செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..................................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ...............................................................

.........................................................................................................................

..................ஆம் ஆண்டு...................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா...............................ஐ.......... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

..........................................

திகதி :................................ கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

- தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00
  பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00
- காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.
- பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)
- புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300 ப/க்ஸ் : 011-2231490
  மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk
  Website : www.kithudanapubuduwa.net
  அச்சகம் : புபுது அச்சகம்,
  452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.
  தொலைபேசி : 011-2958439
- பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை
  ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300
- சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :
  - ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
  - ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
  - புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
  - புபுது நிவச, தங்கொட்டுவ.
  - புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
  - கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
  - 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை ரூ. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

## பங்குனி மாதம் 2011

## அட்டைப் பட கதை

கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்

(பிலிப்பியர் 2:6-7)

நாற்பது நாட்களாக பாலை நிலத்தில் தனிமையில் செபத்திற்கு உள்ளான நேரத்தில் இயேசு கிறிஸ்து நாதரின் உணர்ச்சிகள் சிந்தனைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்று புரிந்து கொள்ள அதிகமாக மனித அறிவால் மாத்திரம் முடியாது. தூய ஆவியானவரால் எம்மை மூடிக் கொள்ள இடமளிக்கும் போது எம்மை வழிநடத்தும் எமது மேல் உள்ளத்தின் ஆழ் உள்ளத்தில் பதிந்து இருக்கும் அதிக நிகழ்ச்சிகள் இறை தந்தையானவருக்கு அருகில் நிற்க உதவும் அருட் சாதனமாக்கிக் கொள்ள முடியுமாயிருக்கும். இறை தந்தையானவர் ஒவ்வொரு நிமிடமும் கிறிஸ்துநாதர் ஊடாக என்னுள் வருகின்றார். என்னை மாற்றுகின்றார்

ISSN 1391 - 5975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org